# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI. } 1903ஆ ஜுன்மீ 20உ { இலக்கம் 11.

## THE MADURA TAMIL SANGAM.

## மதுரைத்தமிழ்ச்சங்கம்.

செந்தமிழ் நாட்டின் தலைநகரும் முன்னர்ச்சங்கமிருந்து தமிழா ராய்ந்ததுமான இம்மதுரை மாநகரில் ஸ்தாபிக்கப்பெற்ற இச் சங்கம், தனது பலவகைப்பட்ட துறைகளிலும் செழிப்படைந்து 1903ஆ மேமீ 24உ யன்று தன்னிரண்டாவது ஆண்டுநிறைவைப் பெற்று விளங்கிற்று. அவ்வப்தபூர்த்தி மகோற்சவத்தைக் கொண் டாடுதற்பொருட்டு இத்தமிழ்நாட்டின் பற்பல இடங்களினின்றும் வித்வசிரோமணிகள் பலரும் மற்றுந் தமிழபிமானிகளும் வந்திருந் தார்கள். இச்சங்கம் நடைபெறும், அக்கிராசனாதிபவர்களுபதி டைய அழகிய பெரியமாளிகை நன்கு யலங்கரிக்கப்பட்டுக் கண்கவர் வனப்புடையதாயிருந்தது. மாலை 3-மணிக்கு எல்லாரும் ஒன்று கூடியபின்னர், முதலில் சிற்றுண்டிமுதலியன வழங்கி உபசரிக்கப்பட் டன. அதன்பின், அனைவரும் மகாசபையிற்குழுமி அளித்த அற்பு தக்காட்சி இச்சங்கத்திற்கு இனியுண்டாகும் ஆக்கத்திற்கும் ஊக்கத் திற்கும் உண்மையான அறிகுறியாகவேயிருந்தது.

அப்பொழுது இச்சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந் பி. பாண்டித்துரைத்தேவரவர்கள் எழுந்து, திருச்சிராப்பள்ளியில் எஸ். பி. ஜி. காலேஜ்போதகாசிரியரும், செந்தமிழுணர்ந்த சீரியோருமாகிய ப்ருமஸ்ரீ-பி. குருராயரவர்களை அம்மகாசபைக்கு அக்கிராசனம் வகிக்க வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோட்கிணங்கி, ராயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அப்பொழுது, இச்சங்கம் என்றும் நிலைபெற்று நீடூழிவாழ்க என்ற வாழ்த்தடங்கிய, இச்சங்கத்துப் பரிபாலகரான சேதுவேந்தரவர்களின் கடிதம் கரவொலியுடன் வாசிக்கப்பட்டது. இச்சங்கத்தின் வருஷோற்சவத்துக்கு வரமுடியாத வித்வான்களிற்சிலர், சங்கத்தக் கிராசனாதிபதியவர்கட்கு எழுதிவிடுத்த வாழ்த்துக்கடிதங்களும் படிக்கப்பட்டன. முதற்கண், ராயரவர்கள் தமக்குக்கிடைத்த ஸ்தானவிஷயமாகச் சில பேசியபின்னர், இச்சங்கத்தின் இரண்டாம் வருஷத்து அறிக்கைப் பத்திரம், சங்கத்துக் காரியதரிசியாகிய ஸ்ரீமத். டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களால் வாசிக்கப்பட்டது. அதன்பின், ராயரவர்கள் அங்கு வந்திருந்த வித்வான்களை அம்மகாசபையில் உபந்யசிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே, முதற்கண், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமத். எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், அடுத்து, இச்சங்கத்தின் உபாக்கிராசனாதிபதியும், இந்நகர்ப் பிரபல வக்கீல்களுளொருவருமாகிய ஸ்ரீமத். பி. எஸ். சுப்பிரமண்யஐயரவர்களும், பின்னர் கோயம்புத்தூர் சென்ற் மிக்கேல் காலேஜ் போதகாசிரியரும், சென்னை ஞானபோதினிப் பத்திராசிரியருமாகிய ஸ்ரீமத். எம் எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை யவர்களும், அதன்பின், திருநெல்வேலி இந்துகாலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். தி. ப. சிவராமபிள்ளையவர்களும் இச்சங்கத்தின் அபிவிருத்திக்கேற்ற பற்பல விஷயங்களைக்குறித்து உபந்யஸித்தார்கள். பின்னர், அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் ராயரவர்கள் தமிழ்ப்பாஷையின் பெருமையையும், அதனைவளர்த்தற் கெழுந்த இச்சங்கத்தின் மாட்சியையும்பற்றியாவரும் மகிழப் பேசினார்கள்.

முடிவில், போனகிராப் என்னும் யந்திரத்தினால் இனிமையாகிய பற்பலபாடல்களும், புல்லாங்குழல், பிடில் வாத்தியங்களும் அங்கு நிறைந்திருந்தோர்களை ஆனந்தக்கடலுள் ஆழ்த்தின. சபையில் வந்திருந்தோர்க்குச் சந்தனம், பூ, வெற்றிலை, பாக்கு முதலியன வழங்க

ப்பட்டன. பின்னர், இச்சங்கத்தக்கிராசனதிபதியவர்களால் இவ் வருஷோற்சவத்திற்கூடிய மகாசபைக்கு அக்கிராசனம் வகித்த ஸ்ரீமாந்-குருராயரவர்கட்கும், மற்றும் சபையோர்களுக்கும் வந்தனமளிக்கப்பெற்றது. இஃதுடன் மாலை 6. மணிக்கு அன்றுசபைகலைந்தது.

## தீர்மானங்கள்.

### 1. (i) ஆங்கில கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷை.

1. ஆங்கிலகலாசாலை மாணாக்கர்க்கு இச்சங்கத்தாரால் நடத்தப்படும் மெட்ரிக், எப். ஏ, பி. ஏ. பரீக்ஷைகட்குக் கேட்டற்குரிய வினாக்கள், சர்வகலா சங்கத்தாரின் வினாக்களைக்காட்டிலும் சிறிது கடினமாயிருத்தல் வேண்டும் ; வினாப்பத்திரிகைகளைக் குறித்துப் பரீக்ஷகர்கள் வேண்டுமாயின் ஒன்றுகூடி ஆலோசித்தலும் வேண்டும் என்று எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்களாற் பிரேரேபிக்கப் பட்டு, எஸ். பால்வண்ண முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோ ரனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

2. பரீக்ஷகர்களையும் பரீக்ஷை மேற்பார்ப்போர்களையு நியமிக்கவும் மற்றும் பரீக்ஷைவிதிகளில் வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யவும், பி. பாண்டித்துரைத் தேவரவர்கள், பி. குருராயரவர்கள் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவாகள, உ. வே. சாமிநாதையரவர்கள், வை. மு. சடகோபராமாநுஜாசாரியா ரவர்கள் ஆகிய ஐவரையும் காரிய நிர்வாக சபையாராக ஏற்படுத்தவேண்டுமென்று எஸ். சாமிநாதையரவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு ஆர். இராகவையங்காரவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

3. ஏற்படுத்தப்படும் காரியநிர்வாக சபையார் ஈண்டே கூடித் தங்களுக்கு இட்டவேலையை விரைவில் முடிக்கவேண்டியிருத்தலால் இங்குத் தற்காலம் வந்திருக்கும் வித்வான்களுக்குள்ளே சிலரைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுதல் காரியம் விரைவில் நடந்தேறுதற்குச் சௌகரியமாகும் என்று அக்கிராசனதிபதியவர்கள் கேட்டுக்கொண்டதன்பின்னர், உ. வே. சாமிநாதையரவர்கட்கும் வை. மு. சடகோ ராமாநுஜா சாரியாரவர்கட்கும் பிரதியாக எஸ். பால்வண்ணமுதலியரவர்களையும், நா. கதிரைவேற்பிள்ளையவர்களையும் நிர்வாகசபையாராக நியமித்தல்வேண்டுமென்று எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சொல்ல, அதனைச் சபையோர் அங்கீகரித்தார்கள்.

காரியநிர்வாக சபையார்.

1. பி. பாண்டித்துரைத் தேவரவர்கள்.
2. பி. குருராயவர்கள்.
3. எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள்.
4. எஸ், பால்வண்ண முதலியாரவர்கள்.
5. நா. கதிரைவேற்பிள்ளையவர்கள்.

4. இச்சங்கத்தாரால் மெட்ரிக், எப்.ஏ, பி. ஏ. வகுப்பு மாணாக்கர்கட்கு ஏற்படுத்தியுள்ள பரீக்ஷைகட்கு முறையே நான்கு, ஆறு எட்டு அணாக்கள் கட்டணத்தொகையாக வைக்கவேண்டுமென்று பி. குருராயரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, பி. எஸ். சுப்ரமணிய ஐயரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

5. எப். ஏ. பி. ஏ. மாணாக்கர்கட்கு ஏற்படுத்தியுள்ள பரீக்ஷைகளை நவம்பர்மீ இரண்டாஞ் சனிக்கிழமையன்று நடத்தவேண்டுமென்று திருமயிலை-சண்முகம் பிள்ளையவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, பி. குருராயரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

6. மெட்ரிகுலேஷன் மாணாக்கர்கட்குரிய பரீக்ஷையை டிஸம்பர்மீ 8உயிலாவது, அன்று ஞாயிற்றுக்கிழமையாயின் அடுத்த தினமாகிய 9உயிலாவது, நடத்தல்வேண்டுமென்று எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது,

7. பரீக்ஷை நடத்துமிடங்களாக முன்னர்க் குறிக்கப்பட்ட நகரங்களேயன்றி கூடலூர் (தென்னாற்காடு); சேலம், திருவனந்தபுரம் ஆகிய இம்மூன்று நகரங்களினும் பரீக்ஷைகள் வைத்துநடத்தல் வேண்டுமென்று எஸ். பால்வண்ண முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, எஸ். சாமிநாதையரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

(ii) தனித்தமிழ்ப்பரீக்ஷை.

8. இச்சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைப் பரீக்ஷைகளோடொப்பத் தமிழ்மாத்திரங் கற்பவர்களுக்கு ஏற்படுத்தக்

கருதியிருக்கும் பரீக்ஷைகட்குப் பாடங்களைக் குறிப்பிட அடியிற் கண்ட வித்வான்களைக் காரியநிர்வாகசபையாராக நியமித்தல்வேண்டுமென்று அக்கிராசனாதிபதியவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, பி. குருராயரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

1. உ. வே. சாமிநாதையரவர்கள்.
2. பி. பாண்டித்துரைத்தேவரவர்கள்.
3. பி. குருராயரவர்கள்.
4. எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள்.
5. ஆர். இராகவையங்காரவர்கள்
6. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியாரவர்கள்
7. திரு. நாராயணையங்காரவர்கள்
8. வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியாரவர்கள்
9. திருமயிலை-சண்முகம்பிள்ளையவர்கள்
10. எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள்
11. நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள்
12. எம். ஆர். ஸ்ரீநிவாசையங்காரவர்கள்
13. ரே. அப்புவையங்காரவர்கள்.
14. தி. ப. சிவராமபிள்ளையவர்கள்.

## II. நூல்கள் அச்சிடும் விஷயம்.

1. நூல்கள் அச்சிடும் விஷயத்தில் இச்சங்கத்தின் பொருள் வருவாய்க்கும் மற்றைச்சௌகரியங்கட்கும் ஏற்ப எந்தெந்த நூல்கள் அச்சிடலாகுமென்று அக்கிராசனாதிபதியவர்கள் அபிப்பிராயப் படுகின்றார்களோ அவ்வந்நூல்களையே வெளியிடவேண்டுவது என்று ஆர். இராகவையங்காரவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, எஸ். சாமிநாதையரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

2. வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள் இச்சங்கத்துக்கு நன்கொடையாகப் புத்தகங்கள் அனுப்பி உபகரித்தமை, அக்கிராசனாதிபதியவர்களால் வெளியிடப்பட்டபின் நன்கொடையளித்தவர்க்குச் சபையோரனைவராலும் வந்தனஞ் செலுத்தப்பட்டது.

இந்தச் சமையம் காலை-11-30 மணி ஆகிவிட்டமையால் மாலை 4-மணிக்கு மற்றுங் கூடுவதாக உத்தேசித்துச் சபைகலைந்தது.

காலை வந்திருந்த வித்வான்கள் அன்றியும், வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியாரவர்களும், எட்டயபுரம் வீராசாமி ஐயங்காரவர்களும், திருச்சி டி. சவரிராயபிள்ளையவர்களும் வந்திருந்தார்கள்.

## III. நூற்பரிசோதனை.

இச்சங்கத்து வித்வான்களாற் பரிசோதிக்கப்பட்டுச் சங்கத்து அச்சிடும் நூல்களின் முதற்பதிப்பில், அச்சுக்கூலி, காகிதமுதலிய செலவுகளுக்குத்தக்க பிரதிகளைச் சங்கத்திற்கு எடுத்துக்கொண்டு எஞ்சியவற்றில் அரைப்பங்கைச் சங்கத்திற்கும், மற்றையரைப்பங்கை நூலியற்றிய அல்லது பரிசோதித்த வித்வான்கட்குங்கொடுக்கலாகுமெனவும், இரண்டாம்பதிப்பில் முன்னினும் விசேடமாக அச்சிடுவதாயின் மூன்றிலிரண்டுபங்கைச் சங்கத்திற்கும் மூன்றிலொருபங்கை அவ்வித்வான்கட்கும் கொடுக்கலாகுமெனவும் சென்ற வருஷத்துச் சங்கக்கூட்டத்திற் றீர்மானிக்கப்பட்டிருப்பதில்; ஷை வித்வான்களுக்கு உரியபங்கைப் பிரதிகளாயல்லது புத்தகவிற்பனை வருவாயினின்றும் ஏற்பட்ட ஈவைப்பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## IV. மொழிபெயர்ப்பு.

பி. குருராயரவர்கள் சம்ஸ்கிருதத்தினின்று சாகுந்தலநாடகத்தையும், எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், ரெ. அப்புவையங்காரவர்களும் சமஸ்கிருதத்தினின்று சாகித்தியரத்நாகரத்தையும், எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் தெலுங்கினின்று சுமதிசதகம் என்னுங் கிரந்தத்தையும் மொழிபெயர்த்துச் சங்கத்திற் களிப்பதாகத்தெரிவித்தார்கள்.

2. எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள் ஆங்கிலதருக்கசாஸ்திரம் சுருக்கமும் தி. ப. சிவராமபிள்ளையவர்கள் கிருஷிநூலும், வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள் தம் நண்பர் சுப்பிரமணிய ஆசாரியாரவர்கள் மூலம் நவக்கிரகத்தைப் பற்றிய நூலும், எஸ். சாமிநாதையரவர்கள் தம் நண்பர் எம். நாராயணசாமி ஐயரவர்கள்

மூலம் ஆங்கிலரசாயன நூலும் இயற்றித்தருவதாக ஒப்புக்கொண்டார்கள்.

## V. நூல்தேடுதல்.

திருமயிலை வித்வான்-சண்முகம்பிள்ளையவர்கள் அடியிற்குறித்த எட்டுப் பிரதிகளைச் சங்கத்திற்களிப்பதாக வாக்குக்கொடுத்தார்கள்.

பிரதிகள்,

1. நற்றிணை.
2. குறுந்தொகை.
3. பதிற்றுப்பத்து.
4. அகநானூறு
5. குலோத்துங்கன்கோவை
6. திருவாரூர்க்கோவை
7. கழுக்குன்றக்கோவை
8. சிற்றம்பலநாடிகள் சாஸ்திரங்கள்

ஷெ யாரவர்கள் குலோத்துங்கன் கோவையைப் பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து அச்சிடுதற்குரிய வண்ணஞ்செய்து அனுப்புவதாக ஒப்புக்கொண்டார்கள்

திருநெல்வேலி-ஸ்ரீமான் எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள் அடியிற் கண்ட எட்டுப் பிரதிகளைச் சங்கத்திற்களிப்பதாக வாக்குக் கொடுத்தார்கள்.

பிரதிகள்.

1, இரேணுவசித்தர் அகராதி நிகண்டு
2. ஆத்திசூடி (பழைய உரை).
3. கொன்றைவேந்தன் (பழையவுரை).
4. தத்துவவிளக்கம்.
5. தாளசமுத்திரம்.
6. சமரசம்.
7. முத்திநிச்சயம்.
8. கட்டளைக்கொத்து.

தரங்கம்பாடி வித்வான் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள் திருவாசகத்திற்குள்ள பழைய உரைப் பிரதி ஒன்றனுப்புவதாக வாக்களித்தார்கள்.

[இவையனைத்தும்யாவருமறிதற்பொருட்டு மதுரைத்தமிழ்ச்சங்கத்து இரண்டாம் வருஷோற்சவக்கூட்டம் என்ற பத்திரிகையினின் றெடுத் தெழுதப்பட்டன.]

பத்திராதிபர்.

---

## NEDUNALVADAI: A STUDY.

## நெடுநல் வாடை ஆராய்ச்சி.

---

நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவர்களால் அருளிச் செய்யப்பட்டு அச்சான்றோராலேயே தொகுக்கப்பட்ட பத்துப்பாட்டுக்களுள் ஏழாவதாய் நிறுத்தப்பட்டது நெடுநல்வாடை என்னும் பெயரிய பண்புசால் பனுவல்.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோல நெடு நல்வாடை—கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து".

என்னுஞ் செய்யுளாற் பத்துப் பாட்டுக்கள் இவையென்பதும், மலைபடு கடாத்தில் "தீயினன்ன வொண் செங் காந்தள்" என்பதற்கு நச்சினார்க்கினிய ரெழுதிய விசேட வுரையால் இவற்றைத் தொகுத்தோர் சங்கப்புலவர்களே யென்பதும் நன்குவிளங்குகின்றன. உரைச் சிறப்புப் பாயிரத்துள், "ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து, சான்றோருரைத்த தண்டமிழ்த் தெரிய, லொருபது பாட்டும்" என்று சிறப்பித்துப் பாராட்டிக் கூறிய ஆன்றோர் திருவாக்கே இவற்றின் அருமை பெருமைகளை நன்கு புலப்படுத்தும்.

பத்துப் பாட்டின் இலக்கணம்

1. "நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
யேறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே.
அதுவே

2. அகவலின் வருமென வறைகுநர் புலவர்"

என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களுட் கூறப்பட்டுளது.

பத்துப் பாட்டுக்களுண் முதலாவதாய திருமுருகாற்றுப் படையும், ஏழாவதாய நெடுநல்வாடையும் புலவர் பெருமான் நக்கீரனாரா

லருளிச் செய்யப்பட்டன. திருமுருகாற்றுப்படை நூற்பயனாய நாற்பொருள்களுள் இறுதிக்கண்ணதாய வீடுபேறு நுதலுதலின் அதனை முதற்கட் கோத்திட்டார். அஃது வீடுபேற்றுறுதிப் பெரும்பயன் கூறுந் தெய்வப் பாட்டாதனோக்கிப் பதினொராந்திருமுறையில் நம்பியாண்டார் நம்பி எடுத்துச் சேர்த்துளார். நக்கீரர் சிறப்பும் அவர் அருளிச் செய்த பனுவல்களின் சிறப்பும் நம்மால் எடுத்துரைக்குந் தன்மையன வல்ல.

"ஆலவா யமர்ந்த வழனிறக் கடவுள்
செந்தமிழ் வழக்கு மூர்த்தநின் றிசைப்பக்
சடாவிடை நிகழ்த்துந் தடாப்பெரும் பேறு
மிறைவன் கண்ட பொருள்வரம் பறிந்து
சொன்னெறி மாட்சியும் பொருணெறி மாட்சியு
மளவையின் விளைவுந் தெளிவுற விரித்துச்
சுவைபெற வுரைத்த நவையில் புலமையும்."

சீரிதினியைந்த செந்தமிழ்ப்புலவர். அவர் அருளிச்செய்த நூல்களோ,

"சொற்றொறுஞ் சுரக்கு மற்றமி லின்பமும்
பட்டாங்கு கிளக்கு முட்டறு சிறப்பும்"

கொண்டு விளங்கி நிற்பன. நக்கீரனார் அருளிச்செய்த மற்றைய நூல்களாவன:—களவியல் உரை, கைலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம்: சில ஆசிரியர்களின் வழக்கத்திற் கேற்ப இவர் தமது திருமுருகாற்றுப் படையினையும் நெடு நல்வாடையினையும் ஒரே விதமாகத் தொடங்கியுள்ளார். ஆண்டு 'உலக முவப்ப வலனேர்பு திரிதரு. பலர் புகழ் ஞாயிறு' என்றார், ஈண்டு' வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப் பொய்யா வானம், என்று தொடங்கியுள்ளார். நிற்க.

நெடுநல்வாடை என்னும் பெயர் இந்நூலுக்குப் போந்ததன் காரணந் தெரிப்பாம். நெடுவாடை என்னுந் தொடரும், நல்வாடை என்னுந் தொடரும் இயைந்து நெடுநல்வாடை என்றாயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஒருழிபோலத் தோன்றுதலின் அவட்கு நெடிதாகியவாடையாயிற்று, அகத்தொடுங்

கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருளுப், அப்போகத்தின் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்ல தாகிய வாடையாயிற்று. ஆகவே, அவ்வாடை நெடுநல் வாடை யாயிற்று.

நெடுநல்வாடை 188-அடிகளா லியன்ற நேரிசை ஆசிரியப்பா வாகின்றது. இப்பாட்டுச் சுட்டிஒருவர்பெயர்கொள்ளாமையின் அகப் பொருளாமேனும் "வேம்புதலையாத்த நோன்கா ழெஃகம்" (176) எனப் பாண்டியனைக் குறிக்கும் அடையாளப்பூக் கூறினமையின், அகமாகாதாயிற்று. இப்பாட்டு நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்று பொருதலின் வஞ்சிப் புறப்பாட்டாகும்; வஞ்சிக்குக் கொற் றவை நிலையுண்மையின், கொற்றவையை வெற்றிப் பொருட்டுப் பரவு தல் கூறினர்.

இனி நூலின் விடயத்தை யெடுத்துக் கூறுவாம்: ஐப்பசி கார்த் திகை மாதங்களாகிய கூதிர்க் காலத்தி னியல்பை முதல் 72-அடிக ளுள் விளக்குகின்றார்; எங்கும் நீர் மிகுந்திருத்தலின் கோவலர் பசுக் களை மேட்டு நிலங்களில் மேயவிடுதலும், குளிர்ச்சி வருத்துகையி னாலே பலருங்கூடிக் கையிடத்திலே கொண்ட நெருப்பினை யுடைய ராய்ப்பற்பறை கொட்டி நடுங்குதலும், விலங்குகள் மேய்தற்றொழிலை மறந் தொடுங்குதலும், கொக்கினது திரள் நாரைகளோடே கயல் மீன்களைத் தின்னுதலும், மிலேச்சர் கள்ளை யுண்டு நெடிய தெருவிலே திரிதலைச் செய்வதும், அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தைக் கொண்டாடுதலும், கதவுகள் தம்முட் பொருதல் வாய்த்துத் தாழிட் டுக்கிடத்தலும், கணவரைப் பிரிந்த மகளிர் வருந்துதலும் ஆகிய இவ் விடயங்களை உயர்ந்த நடையில் ஒண்மை பிறங்க ஓதியுள்ளனர். அடுத் துள 96-அடிகளான் மன்னவனது கோயிலையும் ஆண்டுத்தனித்திருக் கும் தலைவியதுவருத்தமிகுதியையும் வருணித்திருக்கின்றார்; மலையை நடுவே வெளியாகத் திறந்தாற் போன்றகோபுரவாயில் களையும், முன் கடையினையும், முற்றத்தினையும், அந்தப் புரத்தினையும், பலநிறமாய் வீழ்ந்து கிடந்த கொடிகளையும், திண்ணிய தூண்களையும் கருப்பக் கிருகத்தையும், மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக் கட்டிலையும், மெல்லிதாக விரிந்த அமளியின் மென்மையினையும், அரசன் பிரிகை யினாலே வருந்துந் தலைவியின் பரிதாப நிலையையும், செவிலித்தாயர்

பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியு மாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லித் தலைவியின் துயரை நீக்க முயலுவதையும், அப்பெருந்துயர் நீங்கும்படி அரையன் உடனேவெற்றி பெற்று மீள்வானுக என்று கொற்றவையைப் பரவுவாள் விழைதலையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். ஈற்று 20-அடிகளாற் போர் முடிந்த பின்னர் படைவீட்டிற் றலைவனிருக்கும் வண்ணத்தைக் கூறுகின்றார்: இதனுடன் நூன் முடிகின்றது.

இப்பாட்டு பனுவற் குரிய பத்து லக்ஷணங்களும் பாங்குறவமைந்து விளங்குகின்றது. உதாரணமாகச் சில எடுத்துக் கூறுவாம். ஒவ்வொரு அடியும் எல்லா அழகுகளும் பொருந்தி விளங்குவதாயினும் சிற்சில இடங்களில் யாதேனுமோரழகு மிக்குத் திகழ்கின்றது. கமுகினது தாறுகளிற் பசியகாய் திரண்டு முற்றி யிருத்தலைச் சொல்லுமிடத்து "முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற், கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை, நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு, தெண்ணீர்ப் பசுங்காய் சேறு கொளமுற்ற" என்று வருணித்துள்ளார்; மேற்குறித்த நான்கடிகளும் ஓசை யுடைமை என்னும் அழகு செறிந்து கிடக்கின்றன; அவற்றின் முதல் இரண்டடிகளில் *நெகிழொலி மிக்கிருத்தல் காண்க: அங்ஙனம் நெகிழொலி மிக்கிருத்தல் நவின்றோர்க் கினிமை பயக்கும், நாலுக்குஞ் சிறப்பினை யளிக்கும்; முதற்கண் கோயின் மதிலையும் பிறகு வாயிலினையும் பிறகு முன்கடையினையும், அதன்பின்னர்க் கருப்பக்கிருகத்தையும், பின்னர்க் கட்டிலையும், பின்னா அமளியையும், ஈற்றில் அமளியிற்றுணை பிரிந்து வருந்துந் தலைவியையும் முறைப்படி அமைத்துக் கூறியிருக்கின்றாராதலின் இங்ஙனம் அமைத்தல் முறையின் வைப்பு என்னும் அழகின் பாற்படும; தலைவியின் றுயரை நீக்குவான் முயன்ற செவிலித்தாயர் பலவித உபசார மொழிகள் உரைத்திருப்பரல்லவோ? அவை யனைத்தையும் நவின்றோர்க் கினிமை பயக்கும்படி "குறியவு நெடியவு முரைபல பயிற்றி, யின்னே வருகுவ ரின்றுணை யோரென, முகத்தவை மொழியும்" என இரண்டரை அடிகளிற் சுருங்கச் சொல்லினபோதிலும், அவற்றின் பொருளாழ்ச்சி மிக அதிகமென்பது உற்று நோக்குநர்க்கு நன்கு புலப்படும். செவிலியர்புனைந்துரைத்துநகுவித்துப்போக்குதற்குரிய ரென்னுங் கருத்தை விளக்கியுள்ளார். நடுவே திருவும்

* Liquid Sound.

இரண்டு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப் பூவும் இரண்டு பிடியுமாக வகுத்த உத்திரக் கற்கவிகையைக் குறிப்பிக்க "நாளொடும் பெயரியகோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்து' எனச் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருக்கின்றனர். பிற அழகுகளும் ஆண்டாண்டு உள. இன்னணம் எல்லா அழகுகளும் இயைந்து விளங்குதலாலன்றோ இந்நூல் 'மருவினியகோல நெடுநல்வாடை' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுளது.

இந்நூலினின்றும் நூலுரையினின்றும் சங்கத்தார் காலத்து நாகரிக நிலைமை சிறிது புலப்படுகின்றது. (1) பிச்சியின் அலருஞ் செவ்வியையுடைய அரும்பினது அழகிய விதழ்கள் பகற்பொழுதைக் கடந்து விரியுஞ் செவ்வி மணக்கையினாலே, (இரவும்பகலும் அறியக்கூடாத கூதிர்ப் பருவத்தில்) அந்திக்காலமென் றறிந்து கொள்ளல்; நெடு. ௪0 - க. (2) இரும்பாற்செய்த தகளியில் நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி விளக்கஞ்செய்தல், ௪உ; அரசர்முதலிய செல்வர்களின் இல்லத்தில் பாவைகளின் கைகளிற் பொருத்தி உள்ள அகல் நிறைய நெய்வார்த்து விளக்கஞ்செய்தல், ௧0௧. (3) நெல்லையு மலரையுஞ் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்குதல்; அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தைக் கொண்டாடுதல். ௪௬. (4) குற்றேவல் வினைஞர் சாத்தம்மியிலே கத்தூரிமுதலிய பசுங்கூட்டரைத்தல் ௫0 (5) 'ஒலிமென் கூந்தற் கமழ்புகை யூட்டுதல்' (௫௬) (6) குளிர்நீங்கவேண்டி இந்தளத்திலிட்ட சிவந்த நெருப்பின் வெம்மையை நுகருதல், ௬௬. (7) கோயிலின் நெடிய நிலையில் தெய்வமுறையு மாகலின் அதற்கு வெண் சிறுகடுகும் நெய்யும் அணிதல், ௮௬. 'அணங்குடை நெடுநிலை, நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்,' என்பது மதுரைக் காஞ்சி (8) கவரிமா, அன்னம் முதலியன அரசனது அரண்மனையில் வளர்க்கப்பட்டன; ௬௧. (9) நிலாவின்பயனை நுகரும்பொருட்டு அரசர்கள் ஓர் முற்றம் கோயிலின் மருங்கி லமைத்தல், ௯௫. 'நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்து' என்பது சிலப்பதிகாரம். (10) அரசருடைய தேவிமாரிருக்கும் அந்தப்புரத்தில் ஆண்மக்கள் அணுகவாராத அரிய காவல்களுண்டு ௧0௭ 'அரசருரிமையிலாடவ ரணுகார்' என்பது மணிமேகலை. (11) தந்தத்தாற்சமைந்த கட்டிலைச் சூழமுத்துவடநாற்றி அலங்கரித்தல்; படுக்கைக்கு மேலாக

மென்மைதரும் பொருட்டு அன்னச்சேவலின் தூவிபரப்புதல், முல்லைப்பூ முதலியன பரப்புதல் ; கஙo-ரு.

'தாழிக் குவளையொடு தீண்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்
துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த
விணையணை மேம்பட' என்பது சிலப்பதிகாரம்.

கணவனைப் பிரிந்திருக்கும் பொழுது உயர்ந்த ஆடை ஆபரணங்களை யணிந்துகொள்ளாதிருத்தல். (13) அரசன் றேவிக்குச் செவிலியர்பிசி முதலியன பகர்ந்து, நல்லடிவருடி, உபசாரஞ்செய்தல். (14) போர்முடிந்தபின்னர் சேனாபதி புண்பட்டவீரரை அடைவே அடைவேகாட்ட அரையன் புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம் பொருந்திப் போர்க்களத்தே திரிதல்.

இனி, நெடுநல்வாடையிற் போந்துள அரும்பதங்களும், அருந்தொடர்களும், கவிசாதுர்யமும் இவையென எடுத்துக்கூறுவாம் ; அரும்பதங்கள் : (1) புலம்பு - தனிமை (2) ஞெமிரிய - பரந்த (3) காழ் - தூண், (4) தில்-விழைவுப் பொருட்டு. (5) விளக்கம் - மோதிரம், கசச. 'பொலஞ்செயப் பலிந்த நலம்பெறு விளக்கம்' என்பது மதுரைக் காஞ்சி. அருந்தொடர்கள் : (1) இருகோட்டறுவை (2) அரும்படர் (3) கிம்புரிப் பகுவாய் (4) திண்ணிலைப் போர்வாய்க் கதவம் (5) பணைமருளுநோன்றாள் (6) பாண்டில் விளக்கு. சாதுரியப் பிரயோகங்கள் : (1) கருவொடு பெயரிய காண்பி னல்லில்-கருப்பக்கிருகம். (2) குறியவு நெடியவு முரைபல பயிற்றி-பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள். (3) ஊறுவறுமுலை-குடம், முலைபோறலின் முலையென்றார் (4) நாளொடும் பெயரிய கோளமை விழுமரம்-உத்திரக் கற்கவி. இந்நூலின்கண் உள்ள வடசொற்கள் மிகச்சில ; அவைதாம் தசம், கிம்புரி, நாகம் முதலிய சில. அரியபெரிய நூல்களியற்றிய ஆன்றோர் பலரும் "முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும், பொன்னேபோற்போற்றுவம்" என்பதற்கிணங்க இந்நூலின்கட்போந்துள பொருளையன்றிச் சொற்றொடர்களையும் தத்தம் நூல்களுள்ளே ஆங்காங்கு இன்சுவைபெருக இயைத்துக் கூறினார் ; நக்கீரனார் புலவரேறாய்ப் பொலிந்தன ராதலின் இவர் நூலினின்றே மற்றைய புல

வர்கள் போற்றி யெடுத்துச் சேர்த்துளாரென்று, கூறுதற்கு இட முண்டு; ஆயினும் யான் அங்ஙனம் ஒருதலையாகத் துணிந்து கூறுகின் றேனல்லன். (க) படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள், முடலை யாக்கை முழுவலி மாக்கள்; ()நெடு ௩க-௨; பெரும்பாண் - ௬0 ௬க (2) "ஆறுகிடந்தன்ன வகனெடுங்தெருவில்" (நெடு ௩0; மதுரைக் காஞ்சி-௩௫௯) (3)தேறன் மாந்தி மகிழ்சிறந்து" (நெடு-௩௩; குறிஞ்சிப் பட்டு-௧௫௫); சிலப்பதிகாரத்து அந்திமாலைச் சிறப்புச்செய்காதையில் நெடுநல்வாடையிற் போந்துள நுண்பொருளுஞ் செஞ்சொற் றொடர் களும் ஆசிரியர் இளங் கோவடிகள் இன்சுவை பெருக இயைத்துள் ளனர்; (4) நிலவுப் பயன்கொள்ளு நெடுநிலா முற்றம்—நெடு. ௬௫-சிலப் அந்தி.௩௧.

(5) 'குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகி றுரந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனமறுக,,

நெடு-௫௧.௨ ௫௬; அந்தி.௩௫-அ,

(6) 'துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த
விணையணை மேம்பட'

நெடு. க௩௨-௩; சிலப். அந்தி. ௬௬-எ.

(7) 'வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி'

நெடு. ௬0-௧! சில வேனிற்காதை கஎ அ.

இவைபோல்வன பிற இன்னும் பலவுள. அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன. இந்நூலிற் போந்துள சில அருந்தொடர்கள் புற நானூறுமுதலிய பண்டைய நூல்களிற் காணப்படுகின்றன (வெள்ளி வள் ளிநெடு. ௩௬; சிந்தாமணி, கோவிந்தை...). 2 இறைப் பணைத்தோள் நெடு. ௩௬, புறநானூறு, 3 மடவரன் மகளிர் 4 பைங்காற் பித்தி கம் 5 கடியுடை வியனகர் நெடு. ௪௬, புறநானூறு 6 சிலம்பி வா னூல் வலந்தன நெடு. ௫௯, பெரும்பாண் 7 பணை நிலை முனைஇய 8 புல்லுணாத் தெவிட்ட 9 புனையா வோவியம் நெடு. ௧௪எ; மணிமே கலை 'மனையகம் புகுந்த மணிமேகலைதான், புனையாவோவியம்போல

நிற்றலின்' 'புனையா வோவியம் புறம்போந் தென்ன' 22-சிறைசெய் காதை. நெடுநல்வாடையிற் குறித்துள முக்கிய விடயம் ஈற்று 40 அடிகளுளடங்கி யிருக்கின்றது; மற்றைய 140 அடிகள் மிகைபடக் கூறலாய்த் தோன்றினபோதிலும் ஆழ்ந்து நோக்குமிடத்து அவை இன்றியமையாதன வென்பது நன்கு புலப்படும்; ஆண்டு ஆசிரியர் வருணிப்பதினின்றும் அக்காலத்துத் தமிழுக்கேயுரிய ஒழுக்கங்களும், மாந்தருடைய நடைமுதலியனவும் பிறவும் நாம் அறிதல் எளிதாகின்றது.

பத்துப்பாட்டுக்களுள் திருமுருகாற்றுப்படைஎன்றமுதற்பாட்டு மட்டில் முருகக்கடவுளைப் புகழ்வது; மற்றவை அரசர்களைச் சிறப்பித்துக் கூறுவன. நெடுநல் வாடையிற் 'சிலரொடு திரிதரும் வேந்தன், என்ற இடத்து வேந்தன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்; அவனை மதுரைக்காஞ்சியில் ருடு 'இருபெரு வேந்தரோடு வேளிர் சாயப் பொருதவரைச் செருவென்று' எனவும் கஉஎ 'ஆலங்கானத் தஞ்சுவரவிறுத், தரசுபட வமருழக்கி முரசு கொண்டு களம்வேட்டவடுதிறலுயர் புகழ்வேந்தே' எனவுஞ்சிறப்பித்துக் கூறப்பட்டுளது.

இவ்வரும்பெரு நூலின் பொருணுட்பமுஞ் சொல்லமைப்பின் நுட்பமும் எடுத்துத் தெளிவு பெறக் காட்டி உள்ளார் இதன் உரையாசிரியராய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர். 'கருவாயுள்ளுறை நுண் பொருள், விழுமிதினெடுத்து வழுவற வமைத்துத்' தெளிவு பெறச்சொலும் வன்மையி லிவரை நிகர்ப்பவர் ஒருவருமிலர் என்பது தேற்றம். 'பத்துப்பாட் டாசிரியர்கள் ஆண்டாண்டு மாட்டேற்றுறுப்பானியாத்த தொடர்களை யுரையாசிரியர்யாற்றொழுக்காக்கிப் பொருள் புலப்படுத்தும் வித்தகங் கல்வித்துறைபோய சொல்விற்பன்னர்கண் மிக வியந்தேத்தற் பாலது' என்னுந் திராவிடப் பிரகாசிகை யுடையார் கூற்று மிகவுண்மையே.

ஆதலின் இந் நெடுநல் வாடை,

பொருட் சுவை சொற்சுவை பொலிந்து விளங்கும்
இணையிலா வுயர் நூ லென்பது பெறப்படும்.

இந்நூலைக்

கலைநலஞ் சிறந்து துலங்கும் கவிகட்
கரும் பொரு ளரும்பதம் அளித்துப் பயன்றரும்
கனி யென மதிப்பர் கற்றுவல் லோரே.

வ. சு. செங்கல்வராயன்.

---

## CHANDRAMUKHA.

## சந்திரமுகன்.

---

### அங்கம்—4.

### களம்—1.

இடம்—சிறைச்சாலை.
காலம்—நள்ளிரவு.
பாத்திரம்—சந்திரமுகன்.

சந்திரமுகன்:— (ஒருவருமில்லாததைச் சுற்றிப்பார்த்துப் பின்) ஐயோ! பன்னிரண்டு மணியாயுமின்னும் தூக்கம் வரவில்லையே! இப்பாழுந் தூக்கம் என்னிடம் அணுகேன் என்கின்றதே ! யான் அதற்கு யாது தீங்கிழைத்தேனோ ? பேசிப் பொழுது போக்கவு மிங்கொருவருமிலையே ! யானென்செய்வேன் ? தெய்வமே ! ஈயெறும் பணுகாவண்ணம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த நான் இச்சிறையிற் படுந் துயர மற்ப சொற்ப மல்லவே ! என்னைப் பெற்றதனால் ஆநந்தக்கடலில் ஆழ்ந்த பிதா சிதாநந்தரை இளமையிலேயே நான் பாவி வாயில் தூக்கிப் போட்டுக்கொண்டு விட்டேன். என்னுடன் அவர் கூடிச் சுகிக்கப்பார்க்க கூற்று களிகூரவில்லைபோலும். ஆனாலுமென்னைப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த தாய் கல்யாணி என்னுடன் கூடிச் சுகித்திருப்பாளென்று நினைத்தேன். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்' என்பதனுண்மையை இப்பொழுதுதான் அறிந்தேன். அதுபற்றியே தான் பெரியோர்.

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினு வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்"

என்று கூறுகின்றார். படைத்த விதி யிழந்தனென். தக்கதந்தையை யிழந்தனென். அருமை யன்னையையு மிழந்தனென். இனியிவ்வுலகி லெனக்

கியாதுளது? யான் எதை யனுபவிக்கப் போகின்றேன்? யானெடுத்த மானிடஜன்மமே வீண். ஜன்ம சாபல்ய மொன்றுமில்லை. யான் பிறந்தும் பிறவாதவனே; இருந்து மிறந்தவனே. யான் என்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையருக்கு யாது பலனைத் தந்தேன்? ஒன்றுமில்லையே. எனது தாய் வராகத்தைப் போலப் பல புத்திரர்களை ஈனாது கரியைப்போல மாணிக்க விளக்கொத்த ஒரே புத்திரனைப் பெற்றதாக அடிக்கடி சொல்லிக் கொள்வாளே. "என்னிதய தாமரையிலிருக்கு மன்னமே! என்னின்பக்குயிலே! என்னருமருந்தன்ன மதலாய்! என் பிரிய புத்திரா!" என்று பலவிதமாக விளித்து என்னுடன் கொஞ்சிக் கெஞ்சி விளையாடுவாளே. இப்பொழுது அவையெல்லாமெங்கே? அவள் என் செய்வாள்? ஐயோ! அன்னாய்! நீ யெப்பொழுதும் அலறியலறிக்கண்சிவக்க மனம் நோவத் தேகம்வாட உடம்புசிலிர்க்க மனம் வருந்தி உழலுகின்றனையோ? யாதொரு சங்கதியுந்தெரிய வில்லையே! நீ வேறு தேசத்தினிலன்றோ இருக்கின்றனை? உன்னருமைப் புதல்வன் நீங்கியதனால் உயிர் துறந்தனையோ? தற்கொலை புரிந்தனையோ? அவ்வாறிருப்பின் ஐயோ! ஜகதீசா! யான் என்செய வல்லேன்? என்னையீன்றெடுத்ததனுய பயனிதுகொல்? யானேமாங்கத நாட்டின் கிரீடத்தைத் தரிப்பேன் என்று நினைத்தாள். என் சிற்றப்பன் துன்முகன் என்னைப் பட்டத்தினின்று நீக்கியதுமல்லாமல் என்னைச் சிறையிலுமடைத்தான். "வாய்த்தவீடும்போய் அடுப்புநெருப்பு மவிதலொத்ததே" 'முட்செடிகளின் நடுவில் ரோஜாப்பூ இருப்பது போலவும், காக்கைக் கூட்டத்து நடுவே அன்னப்பறவை போலவும்' திகழ்ந்தேன் என்று என்னன்னை யெப்பொழுதுஞ் சொல்லா நிற்பள். ஆனாலிப்பொழுது காவலாளரின் நடுவிலுற்ற கைதியாயினேனே. அவள் என்னையெப்பொழுதும், பூவுலகிற் போந்ததொரு புத்தமுதே! என் முத்தே! என்னுயிர் காக்கவந்த மானிடர் நாயகமே! தெவிட்டாத தெள்ளமுதே!" என்றே தான் அழைப்பாள். என்னை அவள் முத்தமிட்டு மனம் பூரித்திடுவள். அவள் தேன்மொழிகள் என் செவி பருகாது நிற்பக் கர்ன கடூரமான கொடிய காவலாளரின் வார்த்தைகளே எனது செவிவாய்ப்புக்கு என் மனதைப் புண்படுத்துகின்றன. மதிநிலவு வெளியில் நன்றாய்க் காய்கின்றது. சந்திரனுங்கூட என் மிடியை மிகுதியாக்க வந்தனன் போலும். அவன் சந்தோஷத்தைக்காணக்காண என் துயரம் அதிகரிக்கின்றது. ஆகா பூர்ண சந்திரன் எவ்வளவு பிரம்மானந்தமாய்ப் பிரகாசிக்கின்றான். அந்தச் சந்திர பிம்பம் இச்சலாகைக் கல்லில் பிரிதிபலிப்பதைப் பார்த்தால் என்மனம் பொறுக்கவில்லை. இராப்புட்கள் இன்னிசை பாடுவது எவ்வளவு ரம்மியமாயிருக்கின்றது. ஆனால் என் பெயரும் சந்திரன் தான். யான் மதிமுக

த்தை யுடையதாகப் பெயரிட்டிருப்பது காக்கையை யன்னப் புள்ளோடு ஒப்பிடுதலை யொக்கும். அவன் சந்தோஷத்துடன் பிரகாசிக்கின்றான். யான் துக்கசாகரத்தில் மூழ்கித் தடுமாறுகின்றேன். அவன் முகத்திற் கிரணங்களாகிய கலைகளிருக்கின்றன; என்முகமோவெனில் துயரத்தால் வாடிவதங்கி யிருக்கின்றது. ஓ! சந்திரா! நீயும் என்னை வருத்தவா வந்தாய்? அழகிய வம்புலியைக் கண்டால் என் துயரம் மிகுதியாகின்றது. என் செய்வது? அதுவுமென்றன் தலை விதியே. இவை யெல்லாவற்றையும் பொறுக்கினும் பொறுக்கலாம். ஆனால் என் சிற்றப்பன் என்னைக் கொல்லுதற்குச் செய்யுஞ் சூழ்ச்சிகள் எண்ணுதற்கரியனவே. நான் அவைகளை எங்ஙனே பொறுத்திடுவேன்? என்னை யெப்படியாவது கொல்லவேண்டுமென்று நினைத்திருக்கின்றானே! நானே தற்கொலை செய்துகொண்டு விடலாமென்றால் எனக்கு மனந் துணியவில்லையே. என்னன்னை உயிரோடிருப்பின் இச்சங்கதி செவியுற்றுத் தானும் இறப்பாளல்லளோ? நான் அவளைத் தனியே யெப்படி விட்டிருப்பது? மேலு மப்படிச்செய்யக் கயிறாவது விஷமாவது என்னிடமில்லையே! என் சிற்றப்பனாகிய கொடும்பாவியினின்றும் யானெப்படித் தப்புவேன்? அவன் ஒரு நல்லபாம்பாயிருக்கின்றனனே! யான் கருடனாயிருப்பின் அவனைச் சுட்டெரித்துச் சாம்பராக்கி விடுவல். ஆனால் நான் இன்னும் ஒரு சுண்டெலியாயிருக்கின்றேனே! அக்கொடிய பாம்பின் வாயினின்றும் எப்படித் தப்புவேன்? எனக்கொரு வழியும் தோன்றவில்லையே! என் சிற்றப்பனாய துன்முகன் அதி மூர்க்கனாயிற்றே. "மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என்பது அவனுக்கே யியையும். 'அன்னியருக்குத் தீங்கிழைத்தோன்றனே தீங்குறுவான்' என்பது முதியோர் மொழியல்லவோ? ஆனாலும் பலவிதத்திலும்யானும் முயன்று பார்ப்பல். அதனால் இறப்பின் நன்று. பிழைப்பினதனினும் நன்று. எவ்விதத்திலும் அவனென்னைக் கொலைசெய்து தீர்த்து விடுவான் என்று நினைக்கின்றேன்.

(அலறியழுகின்றான். மூர்ச்சித்து விழுகிறான்: தானே பின் சிறிது தேறி.)

அநாதி முக்தசித்ரூப சதானந்த சாக்ஷாத்கார சதாசிவ கிருபை எம்பேரிலிருந்தாலொருவேளை பிழைப்பினும் பிழைப்பேன். எல்லாம் விதியின் படியாகின்றது. விதியை வெல்லுபவர் யாவர்? தலைவிதியாரைவிட்டது? விதிகடக்க மலரவனாலு மியலுமோ? அவனாலேயே முடியாதெனின யாம் யாதுசெய்ய வல்லேம். விதியைக்கடத்தல் அனைத்தையும் ஆக்கும் அயனுக்கு மரியதொரு செயலாம். அதனாலேதான் பாடியிருக்கின்றார்:—

பல்லவி.

ஆரை விட்டது காண்—விதிவசம்
ஆரை விட்டது காண்—தலைவிதி
எவரை விட்டது காண்.

சரணங்கள்.

சீதை பிறந்ததும் லங்கை யழிந்ததும்,
தேவேந்திரன் கண்கள் ஆயிர மானதும்,
சூதாடி ஐவர் வனவாசம் சென்றதும்,
சொல்லுக் கரிச்சந்திரன் காண்விலையானதும் (ஆ)
கர்ணன் பிறந்ததும் ஐவர் வனவாசம்,
காட்டினிற் சென்றதும் நாட்டை மறந்ததும்,
மன்னன் துரியோதனன் சேனை யழிந்ததும்,
வால் கூறு வாலராய் கூடியிருந்ததும் (ஆ)

அரிச்சந்திரன் வறுமையாற் பட்டபாடும், நளன் கலியினால் நுகர்ந்த துன்பமும், பஞ்சவர் துரியோதனாதியரால் அனுபவித்த இடும்பையும் பகரற்கரியனவே. ஆனாலும் அவர்கள் கடைசில் எவ்வளவு கீர்த்தி பெற்றுப் புகழ்படைத்து இன்பமனுபவித்துப் பலர் போற்றப் பிறர் தொழ ஆநந்த பதவியை அடைந்தனர்! அது மாதிரியாகவே நானுமித் துன்பத்தினின்றும் புடம்போட்ட தங்கம்போல் பிழைத்துத் திகழலாம். எல்லாம் அயனினருட்படியாகின்றது. அவரைத் துதிப்பினும் புண்ணியமுண்டு.

"சந்திரமுருகா நல்ல தந்திரமுருகா ஞான சற்குருவு நாதமுருகா
சாரிமுருகா வறுமை தீருமுருகா சுவாமி சச்சிதானந்தமுருகா
சுந்தரமுருகா மயிலுகந்தமுருகா எங்கள் சூரசங்காரமுருகா
சோதி முருகா ரத்நவேதி முருகா வெங்கள் சூரசங்கார முருகா
மந்திரமுருகா என்முன் வந்து முருகா வரந்தந்து காத்தருளுமுருகா
வாரு முருகா கிருபை கூருமுருகா உன்றன்மைந்தனைக் காருமுருகா
அந்த முருகா சத்திமைந்த முருகா யெங்கு மழகான நீதிமுருகா
ஆறுமுருகா குறைதீரு முருகா வெம் மானந்தமான முருகா"

"தூண்டிலகப்பட்ட உயிரதுபோலத் துடிக்கின்றேனே சுப்பிரமண்யா விதுசமய மடியேனுக்கு, வேண்டுவரங்கொடுப்பதற்குப் பார்த்து நீயே வேறொருவரில்லையென்று நம்பினேனே, மீண்டுவரும் வினைதீர்த்து துயரந் தீர்ப்பாய் வேலவனே சூரசம்மார சங்காரவேலா, ஆண்டவனே யுனைப்பணிந்தேன் பழனிவேலோ அடியேனை உயிர்காத்து ரட்சிப்பாயே.'

* "கண்ணு கடலின் வண்ணு கமலப்
பெண்ணு யகவின் மண்ணுப் பிழழ்;
தி ன்னு வறிதற் கொண்ணுத் திருசே
ரண்ணு வுனைநா னெண்ணு திரோ?

† "சம்போ சாம்பசிவா சகமெல்லாம் படைத்தவனே
வம்பார் பூம்பொழில் சூழ் மதுராபுரி வாழ்பவனே
அம்பாளுக் குடலிலொரு பாதி யளித்தவனே
எம்பா னீகருணை சிறிதேனும் புரிந்தருளே."

நான் அழுது அழுது தொண்டை வறண்டு கண்சிவந்து போய்விட்டதே; உடம்புநோவுகின்றதே! சிறிது தூக்கம்வருகின்றதோ என்றுபார்க்கிறேன். (படுத்தயர்ந்து தூங்குகின்றனள்.

களம்—2

இடம்—சிறைச்சாலையின் வேறொருபக்கம்.

காலம்—இரவு மணியிரண்டு.

பாத்திரக்கள்—பலாயனன் (ஒருபிரபு.)

பேயாண்டித் தேவன் }
கருப்பாண்டி } (கொலையாளிகள்)

பலா:—அடே! பேயாண்டி! கருப்பா! இருவரும் இங்கேவாங்கடா.

இருவரும்:—ஏஞ்சாமி! கும்பிடு போடரேஞ்சாமி!

பலா:—இவ்வளவுநேரம் என்னசெய்துகொண்டிருந்தீர்கள்.

இருவரும்:—சாமி! தூங்கிக்கிட்டிருந்தேங்க; நாங்க ஒங்களை ஒண்ணுகேக்கவேணுஞ்சாமி?

பலா:—என்னதேவை?

பேயா:—அதான் ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே,

பலா:—என்னடா அது? சொல்சீக்கிரம்.

பேயா:—அதாஞ்சாமி! நண்டு சொப்புக்கள்ளுக்கு.

பலா:—நானிருக்கும்போது உங்களுக்கு அதற்கென்னகுறைவு. இரண்டுக்கு மூன்ருய்க் கொடுக்கச் சொல்கின்றேன் பயப்படாதேயும்.

கரு:—டோ! பேயா! ஒண்ணே மறந்துகிட்டே வந்துட்டேன்.

பேயா:—என்னடா தூங்கிகினுபேசரையோ?

கரு:—அதாண்டா நாஞ்சொல்லரேனே.

பேயா:—எதண்டா?

---

* போஜராஜசரித்திரம் † ரூபாவதி.

கரு.—கள்ளுச்சொப்பு படுத்துகி எனடத்திலே வச்சுட்டுவந்துட்டேன்.

பேயா:—அதுக்கென்னடா அப்புரம் எடுத்துகினுபோச்சு.

லா:—யான்சொல்வதைக் கேளாது என்ன சளசளவென்று பேசுகிறீர்கள்? ம சொல்லும் காரியத்தைச் செய்யுங்கள்; அப்படிச்செய்வதாக முன்னரே சத்தியஞ் செய்யுங்கள்.

இருவரும்:—அப்படி யுங்க, உத்தரவுப்படி, சத்தியமாய்ச் செய்கிறேங்க.

பலா:—அப்படியானால் இங்கே சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்கிற சந்திமுகனை இன்னிரவே கொன்றுவிடவேண்டும்.

கரு:—ஐயோ! சாமீ! ஒங்களுக்கு ஆயிரக்கும்பிடு. இந்தவேலைமாத்திர மிங்க வேண்டாம்; அந்தவேலையை நாங்கசெய்யமாட்டோஞ் சாமி!

பலா:—செய்வதாக சத்தியஞ்செய்தீர்களே.

பேயா:—நாங்க செல்விக்கொரு சத்தியம்செய்வோங்க.

பலா:—ஏது! நான்சொல்கிறேன். அதைக்கேட்பதற்குள் அவசரப்படுகிறீர்கள். நான்சொல்வதைக் கேட்காவிட்டால் இப்பொழுதே உங்களைக் கொன்று தொலைத்துவிடுவேன்.

கரு:—ஆனால் அப்படியே ஆகட்டுங்க; ராஜா கோவிச்சிக்கிட்டா என்னசெய்கிறது? தலையை வாங்கிப்போடுவாரே.

பேயா:—அது சிசர்தான்.

பலா:—ராஜா துன்முகன் தான்உத்திரவுகொடுத்திருக்கிறார். இதோ அப்படிச் செய்யும்படி இந்தக்காகிதத்தில் எழுதியிருக்கின்றது. அரசன்கொடுத்த உத்திரவாக்குமிது. அதன்படித்தான் நான் நடக்கிறேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

பேயா:—அப்படியானுச்சரி எங்களுக்குப் பயமில்லே. இன்னுமொண்ணு கேக்கவேணுங்க.

பலா:—என்னடா அது?

பேயா:—ராசகுமாரன் சந்திரமுகனைக் கொண்ணுவிட்டாக்க அவனுக்கு வேண்டியவங்கவெல்லாம் நம்மைத் தொலைக்க வழிதேடுவாங்களே.

பலா:—அதற்கு நீங்கள் ஏன்பயப்படவேண்டும்? நம்மதயவு இருக்கும்போது உங்களுக்கு யாதொரு குறையுமில்லே.

கரு:—என்ன ஏனம் கொடுக்கிறீங்க?

பலா:—உனக்கு என்னவேண்டுமாகிலும் கொடுக்கச்சொல்கிறேன்; பயப்படதே.

பேயா:—தொப்பே நெரப்ப கள்ளுத்தச்சொல்லவேணுஞ்சாமி.

பலா:—அப்படியே செய்கிறேன்; நேரம் ரொம்ப ஆகிவிட்டது. சீக்கிரமாக அரசன் கட்டளைப்படி ராஜகுமாரன் சந்திரமுகன் வேலையை முடித்துவிடவேண்டும். இந்த இருப்பீட்டிகளைக் கொண்டுபோய்ங் காச்சி இதோ தெரிகிறதுபார் (ஒருதிரையைச் சுட்டிக்காட்டி) இந்தத்திரையின் பின்னல் ஒளிந்துக்கொண்டிருங்கள். நான் காலால் பூமியில் அடிக்கிற சப்தத்தைக் கேட்டவுடன் உடனே ஓடிவந்து என்சமீபத்திலிருக்கும் ராஜகுமாரனை நான் உட்கார்ந்துகொண்டிருக்கும் நாற்காலியில் இறுக்கக்கட்டிவிடுங்கள்.

இருவரும்:—உத்திரவுப்படியே போய்த் தயார்செய்கிறேஞ்சாமி.

பலா:—பத்திரம். ஜாத்கிரதை.

டி. எஸ். திருமூர்த்தி.

---

## KULOTHUNGA CHOLAN KOVAI.

## குலோத்துங்கச் சோழன்கோவை.

---

### பாங்கியஞ்சி யச்சுறுத்தல்.

122. போதோ புகுந்த திருவோ வளர்ந்த தினைப் பூம்புனத்து
மீதேயெம் மையர் வரச் செவ்வி யாயது பெய்த்தமிழைக்
காதே புனையங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பா
திதே யினிவிற்ப தேகுவல் யானுந் திருமனைக்கே.

### கையுறை புகழ்தல்.

123. பாம்பாடி கைக்குடைக் கேசழ லாடி பழமனைக்கே
தேம்பாயு மித்தழை தேடிற்கிட் டாது செழுவிரையக்
காம்பா லழைத்த குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
வேம்பா கெனுமொழி யீருடைக் காமுங்கண் மெல்லிடற்கே.

### இதுவுமது.

124. திருமான் கமலத்து மாயோன் பணிலத்துந் தென்றலந்தேர்ப்
பெருமான்கை வேழத்தும் வெண்குடை யாகத்தும் பேரகிலத்
தொருமா நகுலன் குலோத்துங்கச் சோழ னுறந்தையன்னீர்
வருமா நலமுத்தம் யான்சொணர்ந் தேனுங்கண் மாமுலைக்கே.

### கையுறை மறுத்தல்.

125. பேய்தரும் பான்முலை யுண்டோன் குலோத்துங்கன் பேருறந்தை
வாய்தருங் கொச்சி மலையண்ண லேபகிழ் வாலொக்கு

நீதரு மாந்தழை பின்னல ராங்களை நீள்வடு வாங்
காய்தரு மூவிரங்கும் பல்காலு மிந்தக் கனிபொருட்டே.

இதுவு மது.

126. முன்னொரு வேய்முத்தந் தாங்கப் பொருது முனையரக்கா
மன்னொரு மேனி வருத்தினைந் தாண்மலர்க் கோகனகப்
பொன்னொரு வாத குலோத்துங்கச் சோழன் புகாரண்ணலே
மின்னொரு நூலிடை யோதாங்கு நீதரும் வேய்முத்தமே.

ஆற்றா நெஞ்சினோடவன் புலத்தல்.

127. எய்தாப் பொருளென்று மெய்தாதிங் கெய்தும் பொருணெஞ்சமே
நொய்தாக் கிடைக்குமென் றுற்றி யிராய்பல நூற்புலவர்க்
குய்தா பரநங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பில்
வெய்தா விரப்பை தழையோடு வாடுவை மின் பொருட்டே.

இதுவு மது.

128. கையோ மெலிந்தன கையுறை பேந்திபிக் காலிரண்டு
மையோ வருந்தின போயும்பின் மீண்டுமிங் காருயிரு
முய்யோநெஞ் சேநங் குலோத்துங்கச் சோழ னுறந்தையன்னார்
மெய்யோ நமக்கின்பம் பொய்யோ வறிகிலம் மேற்செய்வதே.

பாங்கி யாற்றுவித் தகற்றல்.

129. அலைமேன் முனிந்த குலோத்துங்கச் சோழ னளகை வெற்பா
சிலைமே னுதலியைச் சென்றிரப் பேன்சென்று காலைதனின்
மலைமேற் கதிர்வர நீவரு வாய்மலை மேற்கதிரா
முலைமேற் பொலியச்செய் வேனுனகை மாணிக்க மொய்ம்மணியே.

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பெருளென மதித்தல்.

130. சூழிகொண்ட பொன்னிக் குமார குலோத்துங்கச் சோழன்வெற்பில்
வழிகொண்ட பெண்ணை மடற்பரி யேறி மலர்க்கணையே
பொழிகொண்ட விற்படை நீங்காது வீதி புகுந்தமின்னார்
விழிகொண்ட நன்மன மீட்போமிவ் வாறன்றி வேறில்லையே.

மடலேற்றினைப் பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தல்.

131. புலவாகும் வெள்ளப் புணையா னபுறத் தாருவினங்
கயலாகுங் கண்ணி பலவுண்டு காண்கடற் காசினியோர்க்
குயலாகுங் காவற் குலோத்துங்கச் சோழ னுறந்தையினனார்
மடலாதும் வெள்ளைப் புணைபெண்ணை யேயென்னு மாநிலமே.

இதுமுன் மடலேற்றினைத் தன்மேல்வைத்துச் சாற்றல்.

132. வேலா வலயத் துடனண்ட கோளகை மீதளந்த
காலான் குமார குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
னாலா மலர்க்குழ லீரின்று வேண்டுவ னோலையப்பான்
மாலாகும் யான்சிவ னாகச்செல் வேனுங்கண் மன்றகத்தே

தலைமக ளவயத் தருமை சாற்றல்.

133. தருக்கோடி யன்ன குமார குலோத்துங்கன் றஞ்சைவெற்பா
மருக்கோ கனக மலரகத் தாளும் வணங்குமெங்க
ளுருக்கோதை மேனிக்கந் தாதியைத் தீட்டி யுலாவென்பதுந்
திருக்கோவை தீட்டிற் கிளவியை நீயெங்ஙன் றீட்டுவையே.

தலைமகன் றன்னைத்தானே புகழ்தல்.

134. கூரெழு வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
காரெழு பூங்குழற் காரிகை யாய்கைக் கிழியகத்தே
சீரெழு பூவை வினையே னமைக்குந் திறமைகண்டா
னீரெழு பூவை யமைத்தா னமைப்பி * னிமைப்பின்றியே.

அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தல்.

135. இங்கோர் கரும்பனை யார்தமைக் கூடுவ தெந்திருமா அ
லங்கோர் கரும்பனை யாரைக்கொன் றேவங் கமிழம்வங்கங்
கொங்கோடக் குத்துங் களிற்றான் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
செங்கோன் முறையிறை வாதகு யோகின் றிருவருட்கே.

பாங்கி கோண்டு நிலைகூறல்.

136. கோலைபார்த் துழலுங்கண் ணாளண்ண லேசின் குறைமறுக்கி
னிலைபார்த்துப் பின்கிழி நீபிடிப் பாய்நெடுங் கொத்துப்பத்துத்
தலைபார்த்துப் பார்த்தந்தப் பார்வையில் வாமச்செந் தாமரைக்கைச்
சிலைபார்த்த கோழிக் குலோத்துங்கச் சோழன் செழுங்கிரிக்கே.

தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தல்.

137. குந்தப் படையிற் கொடிசூழ் குலோத்துங்கன் கோழிவெற்பி
லிந்தத் துயருனக் கேனண்ண லேயிருள் போலிருண்ட
கந்தக் குழலிக் கரும்பிய வாறின்னுங் கண்டதுண்ட
சந்தத் திளமுலை மார்பினும் வாயகத் தன்னிலுமே.

* 'னிமைப்பிறுமே' என்றும் பாடம்.

தலைவன் றலைவி வருத்திய வண்ணமுரைத்தல்

138 நன்றியின் காஞ்சிரத் தின்கர வீரத்தின் சொப்பிளமை
யொன்றிய வாருயி ருண்பதன் றேவுவ ரூழிகட்டின்
வென்றியன் கிள்ளிக் குலோத்துங்கன் கோழியின் மின்னனையா
டுன்றிய நுங்கொம்பி னணிமயு மாமக் கொழிலினுக்கே.

S. IYER
D
MADRAS

பாங்கி செவ்வியருமை செப்பல்.

139. ஆடாள் சுனைகந்து கங்குழங் கூசலப் பாவையினைச்
பாடாள் சிறுமணற் சோறு மடாள்பட ராயமுடன்
கூடா ளுறந்தைக் குலோத்துங்கன் கொல்லிபங் குன்றனையாள்
சூடாண் மலரண்ண லேயெங்ங னேநின் றுயர்சொல்வதே.

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

140. மனத்தா மரையல ருங்கரத் தாமரை வாய்குவியுந்
தனத்தா மரைமுக தம்வா ரறுத்தெழுந் தாண்டவஞ்செய்
கனத்தா மரையன் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
னினத்தா மரையின் மயிலுக்கென் பேர்சொல்லி னேந்திழையே.

பாங்கி யென்னை மறைப்பி னெளிதென நகுதல்.

141. கண்ணும் பொருளும் வெற்பா கலந்தாலுங் கலந்தபொரு
ணண்ணுஞ் சுடரன்றிக் காண்பரி தாமுங்க ணல்வினையா
லெண்ணும் பொருத்த மிருவோர்க்கும் யானின்றி யெய்துங்கொலோ
தண்ணென் கவிகைக் குமார குலோத்துங்கன் றஞ்சையிலே.

அந்நகை பொறாஅ தவன் புலம்பல்.

142. ஒண்பா வளர்க்குங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பின்
வண்பாவை யன்ன வடிவினல் லாயென் வருத்தமெண்ணாப்
பெண்பா லுனக்குமற் றுண்பால் புராரிக்கும் பேதமல்லால்
வெண்பா லொழுகு நகையா யிருவர்க்கும் வேறில்லையே.

பாங்கி தேற்றல்.

143. அழலாய துன்புற லையாவத் தையலென் னுகரவிற்
கழலாது யான்செய்த வாறுசெய் வாள்பண்டி சானிரையைக்
குழலா லழைத்த குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னிழலாடிப் பாவையும் பார்க்கின்ற பாவையு நேரெனவே.

பாங்கி கையுறை பேற்றல்.

144. மொழியேயச் கையுறை தாரோ லெனச்சொல்லு மொய்சுழலாள்
விழியே தாச்சொல்லுங் காணண்ண லேயெண் ணிலாப்பணிலச்

சுழியேயும் பொன்னிப் புகார்மன் குலோத்துங்கச் சோழன்வெற்பி
லழியேயின் கைத்தழை யீவாய் வலிதுங்க ளூழ்வினையே.

கிழவோ னுற்றல்.

145. ஏவிய தன்டணிக் கெய்தாத வேந்த ரெடுத்தபடை
தாவிய வெம்பரி வீரன் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
ஞவியங் கண்ணிநம் போற்புல ராதுதன் னங்கைகொண்ட
காவியங் கண்ணிக்குக் கைம்மாறு வேறொன்றுங் காண்கிலமே.

இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
இறைவிக் கவன்குறை யியம்பல்.

146. வருவா ரொருவர்வந் தேதுஞ்சொல் லார்புன மாட்டகலார்
தருவார் தழைகுழை வார்திரு மேனியுந் தையனல்லார்க்
குருவார் மதனன் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பிற்
றிருவா ரணங்கனை யாதென் கொலோவவர் சிந்தனையே.

இறைவி யறியாள் போன்று குறியாள்கூறல்.

147. மகரமான் கவைய முலைப்பால் பளிக்கு மணித்தரள
நிரைமான் சுடர்திருப் பாற்கட லாய்நெடுஞ் சோலையெல்லாந்
தரைமான் கமலமின் கோமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பில்
விரைமான் பசுந்தோங்கன் மாலா யழகு மிகவின்றதே.

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல்.

148. தண்ணார் மதியக் கவிகைக் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
பெண்ணா ரமுதனை யாய்தலை நாணம் பெரும்புனத்தே
யுண்ணா டியவன் புரிமையெல் லாமொரு வர்க்கொருவர்
கண்ணான் மொழியக்கண் டாவரக்கண் டேன்மலர்க் காவதத்தே.

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

149. தானுனை வேட்டைசெய் வார்புனத் தேவழி கெட்டெய்துவா
ரானார் பனத்தென்னை யாதரித் தோவகி லாண்டமொரு
கோனாகக் காக்குங் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
றேனான சொல்லியென் சொன்னாய் பொருதென் செவிக்கிதுவே.

பாங்கி யென்னை மறைந்ததேன்
னேனத் தழா அல்.

150. உன்னு வியுமென தாவியு முள்ளத் துணர்வுமொன்றாய்த்
தொன்னாண் முதலென்னைக் காத்தனை யேதொல்லை நாளைத்தந்தி
தன்னுவி காத்த குமார குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
லிந்நாண் மறைப்பதற் குத்தக்க நாள்வந்த தேதணங்கே.

பாங்கி கையுறை புகழ்தல்.

151. கூராருந் தாரைக் கினிதாந் தரளங்கன் கொங்கைக்குழாஞ்
சேராநிற் குந்துடிக் காமணங் கேதொல்லை மாமறுநூ
லொராயு நீதிக் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பிற்
காராய நின்குழற் காவெற்ப ரீந்தவென் கைம்மணியே.

தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தல்.

152. காலைக்கு நேமியம் புண்மகிழ் வாயின கண்டுமவை
மாலைக்கு மேனி மெலிவன நோக்கியு மாதயிலுக்
காலைக் கவருங் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னோலைக் குழையணங் கேபெடைனைப் பார்ப்ப ருயிர்ப்பர்கின்றே.

பாங்கி மறுத்தற் கருமை மாட்டல்.

153. நற்பாவை யாயுங் குமார குலோத்துங்க னசைக்கொல்லி
வெற்பாய் வயங்கு முகிண்முலை யால்வெற்பர் வாடக்கண்டும்
பொற்பாவை யாகியு நீயுரு காயினிப் போக்கறியேன்
கற்பாவை யும்முரு கும்மவர் காமக் கடுங்கனற்கே.

குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்.

154. நீலாம் பரனுங் குடநாடர் வேந்தனு நீடிருதோண்
மேலாம் புனைதொங்கல் கொய்வெனென் றார்வெம் புலியுயர்தே
னாலாம் புணரியுங் காப்போன் குலோத்துங்க னசைமுந்நீர்ச்
சேலாம் பொருவிழி யீரறி யேனவர் சிந்தனையே.

பாங்கி தலைவியை முனிதல்.

155. மழையீந்த செங்கைக் குலோத்துங்கச் சோழன் வயலுறைந்தைத்
தழையீந்த மன்னவர் தங்குறை யோதழை வாங்கிவந்தன்
றழையீந்த வென்குறை யோவீந்த நாளி லுறுகுறையோ
பிழையீந்த தென்னென் றறிகின்றி லேனென்றும் பேரணங்கே.

தலைவி பாங்கிதன்னை முனிதல்.

156. பயந்தார் பொருநர்க் கிளைக்கும் பழுகிது பார்க்கிலென்றும்
வியந்தாவி னைவதுங் கண்டுமை வாய்வெங் கராப்பொரமுன்
சயந்தா னழைத்த குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
னயந்தா யிலையெனை யென்குறை கூறினை நன்னுதலே.

தலைவி கையுறை யேற்றல்.

157. கொண்டாற் பழிபாங் கொளாவிடிற் பாங்கி கொடுமுனிவாந்
தண்டார்ப் புரவலர் தாந்தரு மாரந் தசும்பில்வெண்ணெ

யுண்டாற்றங் கொண்டற் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பிற்
பண்டாற் றியவினை யோவினை யேன்கொளப் பட்டதுவே.

இறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தல்.

158 நைக்காந் தழைகோங்கு பைங்கொன்றை நீலக் கருவிளையின்
மிக்காந் தழைகிஞ் சுகப்பூந் தழைவிரி நாண்முளரி
யக்காந்தைத் தார்தன் குலோத்துங்கச்சோழ னளகைவெற்பா
யிக்காந் திருமொழிக் குன்மாந் தழைவஞ்சி யீர்ந்தழையே.

இதுவு மது.

159. ஒத்தேகின் மாந்தழை மாணிக்கவார முடனனைத்தாள்
சொத்தே படுமென் குழலிதன் மேனியுங் கோத்தகவிக்
கத்தேனு வன்ன குலோத்துங்கச்சோழ னளகைவெற்பா
முத்தே விமார்தரு மெய்பா யினுமென் மொழியதுவே.

பாங்கி குறியிடங் கூறல்.

160. தூத்துங் களிற்றன் குமார குலோத்துங்கன் கோழிப்பிரான்
கைத்துங் கவிகையிற் சிந்திடப் போலுங் கறங்கருவி
முத்தும் வயிரமு மாணிக்க ராசியு முன்கொழித்துத்
தத்தும் வரையிடம் யாப்பக லாடிடம் தார்மன்னனே.

பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்.

161. கண்ணுற் குவளையுங் கையார்செங் காந்தளுங் கட்டுரையின்
பண்ணுற் சிலம்புங் குழையச்செய் தேபல நாடுங்கொண்ட
மண்ணுட் டரசன் குலோத்துங்கன் கோழி மலைக்கொல்லிவாய்
விண்ணுட்டு வல்லியொப் பாய்நடப் பாய்வென்று மீள்வதற்கே.

குறியிடத் துய்த்து நீங்கல்.

162. மூரல் கரங்கண் ணிதழ்ப்பகை யாமுல்லை காந்தள்கஞ்சஞ்
சோரமின் பிஞ்டிமின் னேகொய்து மீள்வலிச் சோலைசிற்பாய்
கோர நெடும்பரிக் கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பில்
வீரர்முன் செல்லப் பெரும்போற் பின்னிற்கும் வேந்துமுண்டே.

நீங்குந் தோழி தலைவற் குணர்த்தல்.

163. என்பாங் கினளென்று மின்றுதொட் டேயிந்த வேந்திளையா
ளுன்பாங் கினளிவட் குள்ளுயிர் நீயு பொருசமலப்
பொன்பாங்க னெங்கள் குலோத்துங்கச் சோழன் புகாரண்ணலே
பின்டாங் கதிர்த்திலி வேரிது கூறுவம் பேதையமே.

## இறையோ னிறைவியிடத் தெதிர்ப் படுதல்.

164. புளகா சலக்கொங்கை யாலிடை வாடப் பொதிசெழுந்தே
னுளகா வகத்தென்முன் வந்துநிற் பீருமக் காகவுள்ள
மிள்கா நின்றேனை பயற் பசியாற்ற வெனவினைந்தோ
வளகா புரிமன் குலோத்துங்கன் மால்வரை யாரமுதே.

## இதுவு மது.

165 நடையாற் களிபன்ன நல்விய லான்மஞ்ஞை நன்கிளவித்
தொடையாற் குயின்முலை யாலிளங் கோங்கந் துணைமலர்க்கட்
படையாற் சகோரமிக் கெல்லாமொன் றுயிற்று பார்கடலைக்
கடையா துளவன் குலோத்துங்கன் கோழியங் காவனத்தே.

## இயைதல்.

166. வருந்தத் தவஞ்செய்த வாவினையேற்கு மனத்திருதோள்
பொருந்தத் தவஞ்செய்த வாமுலை மார்புடன் போர்விசயன்
றிருந்தத் தவஞ்செய்த கோழிக் குலோத்துங்கன் சென்னிவெற்பி
லருந்தத் தவஞ்செய்த வாவிதழ் மானித ராரமுதே,

## இதுவு மது.

167. மையோ டரிக்கண்ணி தந்த சுகாநந்த வாரிகண்டா
லையோ வரியந்த வூழி படாவேந்து நான்குதடக்
கையோனை வென்ற குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
வெய்யோனு மோடி விழுந்தே யெழானந்த வேலையிலே.

## புகழ்தல்.

168. தண்டா மரைபெனிற் போதைக்குப் போதை தலைபிரிதா
மண்டாத திங்களு மத்தன்மையாலழ காண்மையெல்லாங்
கண்டார் கொண்டாடுங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
விண்டார்குழலி முகத்துக்கொப் பேதினி மேதினிக்கே.

## ஆயத்துய்த்தல்.

169. நந்தா மலரொத் தனைமலர்ந் தாலுமந் நாண்மலர்க்குச்
செந்தா மரைபன்றிச் சீரெய்து மோதிருத் தோளிணையிற்
கொந்தார மாலைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பில்
வந்தாளுஞ் செந்திரு வேயுன தாய மருவுகவே.

## பாங்கி மெல்லியற் சார்ந்து கையுறை காட்டல்.

170 தண்முல்லை யாழ்மொழி யாய்ச்சியர் மாலெழப் பைம்புறவத்
தொண்முல்லை மேய குலோத்துங்கச்சோழ னுறந்தைவெற்பில்

வெண்முல்லை வாணகை யாய்முல்லைமாலை மிகக்கொணர்ந்தேன்
வண்முல்லை சூடுவ தேநலங் காண்குல யாதருக்கே.

மையுறு கண்ணியைப் பாங்கியிற் கூட்டல்.

171. மைபுறு காவிற் பிரிந்தே நெடிதிங்கு வைகியதற்
சையுறு வார்கம தாயத்துள் ளாரடை யார்முடியைக்
கொய்யுறு வாட்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னெய்யுறு கூர்விழி யாய்விரைந் தேகுவம் யாமினியே.

நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்.

172. அடிநின்ற மீனமுஞ் சாபமு மாழி யடவிபுகக்
கொடிநின்ற வேங்கை யுபர்த்தோன் குலோத்துங்கன் கோழிவெற்பா
கடிநின்ற நோக்கிக்குரியுல காளுங் கருணைக்குநின
னடிநின்ற பாவிக்கு மேத முருவண்ண நண்ணுகவே.

உலகியன் மேம்பட விருந்து விலக்கல்.

173. உண்ணீர் முகிற்கைக் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பா
வெண்ணீர் விருந்தின் மருந்துதற்கே பெங் குலத்துவள்ளிக்
கொண்ணீர்மை யன்பிற் றினைமாவுந் தேனுங் குழைபவுண்டு
தெண்ணீரு முண்டில தோவெங்கண் மால்வரைத் தெய்வமுமே.

விருந்திறை விரும்பல்.

174 நனையார மார்பன் குலோத்துங்கன் கோழிநன் னாட்டிளஞ்சே
யனையார் பிறந்தகத் துட்பிறந் தீரனை யார்பிடிப்ப
வினையாய நஞ்சமு தாயதென் றூலுங்கண் மென்கைபிடித்
தெனைபாள நல்குந் தினைமாவுந் தேனுமிங் கென்படுமே.

பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி.

மாலையம் பொழுது கண்டிரங்கல்.

175. நன்னுண் மதியக் குடையோன் குலோத்துங்க னுகைவெற்பிற்
பொன்னு ளயோத்தியி லுண்டாயபாவம் புனத்துமுண்டோ
வந்நாளும் பெண்பழி கொண்டது மாலையென் றுருஞ்சொல்வா
ரிந்நாளும் பெண்பழி கொள்ளவிம் மாலை யெதிர்ப்பட்டதே.

பாங்கி புலம்பல்.

176. கூறுந் திகிரிப் பெருமான் குலோத்துங்கன் கோழிவெற்பி
லாரும் பொருவ தெளிமைகண் டோவந்த வேந்தன்விடுந்
தேரும் பரியும் புறம்போகக் கண்டு சிலைக்கருப்ப
னூருந் தரிசங் கரும்பினை நாடி யுருநின்றதே.

தலைவனீடத் தலைவி வருந்தல்.

177. சேனா சமுத்திர வெய்யோன் குலோத்துங்கன் றென்னுறந்தைக்
கானார் சுனைக்கப லுண்ணும் புன்னீரொரு சாலுமெழுச்
சாருத செவ்வந்தி தான்வரப் போனவ ராழ்கடல்வாய்
வாரு ரலரிவந் தும்வந்தி லாரென்ன வஞ்சகமே.

தலைவியைப் பாங்கி கழறல்.

178. திருவும் பணியணங் கேபிரி வார்தினங் கேள்வரென்று
மருவும் பழங்க ணுழப்பதென் னேவறி யோர்க்கருளும்
புரிவும் புரிந்த குலோத்துங்கச் சோழன் புகார்வரைவாய்ப்
பிரிவும் புணர்ப்பும் பிரிப்பவர் யார்க்கும் பெருவிதியே.

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

179. தீராத புன்சிணுங் காரவெர் நோயுஞ் சிறையுமுற்ற
பேராயி னன்றிமற் றாறி லார்பெரும் பாரனைத்துஞ்
சோராமற் காக்கு முறந்தைக் குலோத்துங்கச் சோழன்வெற்பிற்
கூரா லசையுமென் றனிமையு மார்க்கின்று கூறுவதே.

இன்னுயிர்ப் பாங்கியோடு பகர்தல்.

180. வாரா திருக்கின் வாராரோ வென்றேங்கும் வரினணங்கே
தேரா தினிப்பிரிந் தாலோவென் றேங்குந் திசைபரக்குங்
கூராழி யங்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
பேராசை கொண்டவர் நெஞ்சுக்கெப்போதும் பெருந்துபரே.

---

## VEDANTA DESIKA.

## வேதாந்த தேசிகன் வைபவம்.

---

(399-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவை யல்லாது பிற்றையோ ருபாதனு காலத்திற் பெரியவாச்சான்பிள்ளை யென்பாரித்தேசிகனார்க்குத் தாமா முந்தி மரியாதை செய்ததற்கா வாக்ஷேபித்த தம்மாணவர்க் கித்தேசிகனார் மான்மியத்தைப் பரக்கக் காட்டுவான் வேண்டி நியாயவித்தையின் விவரணத்தைச் சுருக்கமா வருளிச் செயவேண்டுமென் றிரங்கலு மன்னணமே நம்வாக்கியாயபிள்ளை ந்யாயவிம்சதி, ந்யாஸதிலகம் என்றிருநூல்களை யருளிச்செய் தக்கணமே யன்னவர் டாலீந்து சரண்யஸ் சரணடைந்தோனைப் டாலிப்பா னென்றருள,—இவைக

ளையாய்ந்த பெரியவாச்சான்பிள்ளை நந்தேசிகனாரை நோக்கி யிங்ஙனமாயின்
தாமே முன்னருளிய ‘வறிதே யருள்செய்வர்’—என்ற இத்யாதிகளாய வரு
ளிச்செயல்கள் விரோதியாவோவென, தேசிகர் சர்மச்லோகத்தின் விவரணத்
தையும், அதனது விசேடார்த்தங்களையும், அவ்வர்த்தங்களைப் பிரதிபாதிக்கிற
“வேதனுவர்விரு புர்திருக்கண்ணபுரத்—தாதியானை யடைந்தார்க் கல்லலில்
லையே” —“திருமாலிருஞ்சோலை மலையென்னத் திருமால்வந் தென்னெஞ்சு
நிறையப்புகுந்தான” — “ஜன்மஜன்மாந்தரங்காத் தடியார்களைக் கொண்டு
போய்”—கலியுகமொன்றின் றிக்கே தன்னடியார்க் கருள்செய்யும்” அடிக்கீ
ழமர்ந்துபுகுந் தடியீர் வாழ்மின்” என்றும், பின்னும் உபநிஷத்தான திருப்
பாவையின்கண்.

“தூயோமாய் வந்துநாந் தூமலர்தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா னின்றனவுந்
தீயினிற் றூசாகும் * *

என்றும் சொல்லுகிற பாட்டுக்களையும், ஆழ்வார்கள் - நாதமுனிகள் - ஆளவந்
தார் - உடையவர் - பிள்ளான் - அம்மாள் - அப்புள்ளார் முதலானோருடைய
அனுஷ்டானத்தினையுங் காட்டி—“கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்
லாந்தருங் கோதிலன்” என்றவண்ணமே, எம்பெருமான் பரிபூரண பரமோதா
ரனாகையாலே தமக்கா வொருபடியையும் வேண்டாது பரமகிருபா விசேடத்
தால் தம்மடியார்கள் வாழ்வே தாழ்வா மதித்து ஸம்ஸாரதந்திரஞ் சிதை
யாமைக்கா வோரற்ப வ்யாஜானுஸாரியாய்ப் புருஷார்த்தம் ப்ரஸாதிப்பானாத
லால் ‘வறிதே’ என்பது பொருந்தும். பின்னுமித்தகைய காருணீகத்வா
திகளை நினைந்தே “இத்தனை யடியரானார்க் கிரங்குநம் மரங்கனாய பித்தனை’
என்றுகூறலாயதென்றருளினர். இம்மாற்றங் கேட்டுகந்த பெரியவாச்சான்
பிள்ளையும், பாஷண்டத்ருமஷண்ட தாவதஹனமாந் தூப்பிற்பிள்ளையை
நோக்கி நம்முடையவர் கடாக்ஷத்துக்குப் பரிபூரணபாத்திரரா மும்மைக்கண்
டதிசயாஹ்லாதிக்காரு முளரோவென் றறைகூவிப் பின்னரும் ப்ரபத்திமார்க்
த்தைச் சொலீரென்ன, அக்கணமே மாயாவாதத்வம்ஸகோளரியார்த்தாம்
முன்னஞ்செய்துள ந்யாஸதசகத்தைச் செப்பியருள, அதனது கம்பீரப்ரபாவ
பாவத்தைச் செவிபேற்றுய்ந்த வன்னவாச்சான்பிள்ளை யுள்ளுருகித் தம் மா
ணவரை விளித்து நீவிர் இத்தூப்பிற்பிள்ளையின் பிரபாவாதிக்கத்தைக்காண்டீர்;
முன்ன மின்னுரைப்பிரதமதா மேம்பாடு பநித்திய வென்னைத்தாக்கித்தகற்
கின்னமாய தென்னனு பஃதணைந்த வச்சீடர் குழாமும் ஒருங்கேவிர்தை
யெய்தியவரா யாசிரியரிடத்து க்ஷமாபணஞ்செய்துகொடு நிகமாந்தமஹாதே
சிகரிடபதிப்ரவணராயிருந்தனர்.

இன்னணம் பிள்ளையிருத்தலும், முற்கூறிய நகரத்தின்கண் தத்வவாதி
யாய அக்ஷோப்ப முனிக்கும் மாயாவாதியாய விதியாரண்யருக்கும் வேதாந்

தத்தில் வாதமுண்டாய போழ்தத்து அவ்விருவாது அபிப்ராயத்தையு மாண்டுள்ளார் இராஜபத்திரிகை வாயிலா நம்மாசிரிய ரத்தினத்தின்பால் விடுக்க அதனையேற் றுய்ந்த தேசிகனு ரங்ஙனே అసినాత్వమసినా என்ற ச்லோகத்தினையோரேட்டினிடம் வரைந் தவ்வரைய சமூகத்துக்கனுப்பியருள, அவ்வேந்தனுமற்றுரு மதனையேற் றதனு லியாதார்த்தமின்னதென்றோர்ந் தாறியற்றை முதல் வேதாந்த கோளரியாரது சரணபங்கயப் போதுகளிலேயே யிடையறுது பிரவணரா யிருந்துவிட்டனர். ஈதுணர்ந்த வித்யாரண்யர் விஸ்ஸஹிதராய் 'நுமது சததூஷணியைத் தூஷிப்போம்' என்றொரு பட்டோலையில் வரைந்து பிள்ளைபால் விடுக்க, அதனைக்கண்டாலு மங்ஙனே வெகுளி மீக்கொண்ட வேங்கடநாதாரியர் தம்மாட்டுள சத்தூஷணி யென்னும் பெருநூலையவ் வித்யாரண்யரிடஞ் செலுத்தினர். அதனைவித்யாரண்யராய்ந்து ஒரு சகாரத்தின்மே லொரு குத்திட்டனுப்ப நந்தேசிகனு ரதனை நோக்கி யுடனே சகாரஸமர்த்தனமென்றொரு க்ரந்தஞ்செய்தருளி யக்குத்தின்மே லின்னொரு குத்திட்டுவிட, அஃதோர்ந்த வித்யாரண்யர் சாலவுங் கசிந்தமனத்தரா 'யினி நாமெக்காலத்து மவ் விஷ்ணுகண்டாவதாரத்தை வெல்லவல்லோமல்லே' மென்றங்ஙனே தேசிகரை யடைந் தப்பெருந்தகையாளரது சரண கமலங்களிற் பிரியாப் பிரவணராயிருந்தனர்.

பின்னர் ஸர்வதந்திர ஸ்வதந்திரப்ரஸித்தரான நிகமாந்த தேசிகரது மாஹாத்மியத்தைச் செவிமடுத்த கிருஷ்ணமிச்ரர் என்ற வடதேய வித்வானொருவர் மனும்பொருராய் ஆண்டிருந்து தெக்கணம் புக்கிப் பிள்ளையை யண்மி யன்னாரை விளித்து 'நீவிரெம்மொடு வாதிட்டு விஜயம்பெறுவீரே னுமக்குரித்தாய பிருதனைத்தும் பொருந்தும்; அன்றேல் லேலாது ? எனக் கிளத்தி வேதாந்த விடயமாய்த்துவக்கி மூன்றுநா ளிடையறுது வாதிடலு மீற்றில் நம் வேதாந்தார்த்தப் பிரதாயனரான தேசிகரு மேற்றவணத்தா னம்மிச்சிரரை வெற்றிகொண்டு ஸ்தைர்ய தைர்ய கம்பீரமங்களவிக்ரஹத்தோடு நிற்றலும், அங்ஙனே நிர்ஜிதரான கிருட்டினமிச்சிரர்மனம் வெதும்பி வெறுத்தவராய்த் தேசிகரது ஞானதிசயத்தி லீடுபட்டுத் தாஞ்செய்திருந்த ப்ரபோதசந்திரோதயத்தைக் கடாக்ஷிக்க வேண்டுமெனப் பிள்ளையு மங்ஙனே நாஞ்செய்துள * ஸங்கல்ப சூர்யோதயத்தை நீவிரு நோக்கக்கடவீராக வென்றருளிப் போந் தற்றை நிசிதியிலேயே (தாங்கூறியுள்ள) ஸங்கல்ப சூர்யோதய மென்ற நாடகத்தை யியற்றியருளி விடிந்த பின்றை கிருஷ்ணமிச்ரர் தம்பால் (அவரது) ப்ரபோத சந்திரோதய கிரந்தத்தைக் காட்டவந்த காலையில் தேசிகர் தாமுந் தமது நூலை யன்னார்பால் முன்னர் நீட்டிப் பின் அவரது நூலையும் பிடித்துக் கண்ணோக்கா நின்றனர். இதற்குள் அன்னமிச்சிரர் தாங்கொ

* இந்நூலைத் தேசிகரியற்றியதற்கு முன்னேயே 'செய்துள' என்று இறந்தகாலவகையிற் செப்பியதால், மிச்ரர் கூறியதற்குப் பிரதியும், தாமாசுகவிபாடுவதில் வல்லுநர் என்பதும் நன்கு விளங்குகின்றன.

ண்ட நூலைக் கண்டவளவில் பேராச்சரிய மெய்தி வாட்பொத்தி யதோமுக ராக் கிடந்தனர். பின்னர் சுதர்சனபட்டராதியோர்களு மாண்டேகியவ் விரு நூல்களின் திறனையுமாய்ந்த காலையில், எதிரியின் நூலை திரஸ்கரித்துப் பிள்ளையின் நூலைப் புரஸ்கரித்து "என்னெனிலும் இம்மேதாவியின்து திறன் வழுழியளவு வியப்பினும் போதா! அங்ஙன மல்லாமலா இம்மா நுபாவர்க்கு 'விகமாந்தகோளரி' யெனும் பெயர் வாய்த்தது? பளா! பளா!! இன்னாரது வாக்விசேடமும் ச்லோக வன்மையும், அன்னவைகளினுழ்ந்த கருத்தும், மற் றும் பலவும் சாலவும் மேதக்கன. இங்ஙனமாதற்குரிய காரணம் ஓர் அவதார விசேடத்தாலே யன்றோ?" எனப்பன்னுழிகைகாறும் புகழ்ந்துகொண்டிருத் தலை நேரிற்கண் டுணர்ந்துவந்த விக்ரஹிதராய மிச்ரரு மினிநாஞ் செயற்பா லன யாதொன்று மில்லெனத்தேர்ந்து, அற்றைமுதல் விகமார்தாரியன்துபாத பத்மங்களிற் பிரவணராக் கிடந்தனர். ஆயினு மங்ஙனமு நீங்கிலராய் வாக் கியை விளித்து 'தேவரீ ரியாதினுனும் மேம்பாடுடையீராதலா னீண்டாக்கும் மரியாதைகளைத்தாமுதலாவேற்றுப் பின்னர் யானடையுமாறு நிகழ்த்தவேண் டுகிறே' னெனத் தேசிகர் புன்முறுவற் பூத்தாராய் அங்ஙனே 'யெனக்காய பின் நமக்காக்குவேன்' என்றருளியேற்றவமயமோர்ந்தாலயம்புக்கவனுறை வாரைக் கூயிஇ "யிற்றைக் கிங்காக்கும் மரியாதைகளை யாவர்க்கு மாக்கிய பினெனக்காக்கிப்பின்னர் கிருட்டினமிச்சிரருக் காக்கவேண்டு"மென்றறைந்து போந்தருளினர். அன்னாரு மன்னணமேவாக்க மிச்சிரர் மிக்கத்திகைத்தாராய் யாவர் முகத்தையும் நோக்கிப் (பொதுவாக) 'அந்தோ! யானிவ்வேதாந்த கோளரியின்து லௌகிகத் திறனிலுந் தோற்றேன்' என்றறைந்து இவர் விஷ யத்தில் சிஷ்ப விருத்திசெய்யத் தமக்குச் சில லௌகிக அஸந்தர்ப்ப மிருக்கி றவைகளை நினைந்து நினைந்து மனமைந்து ஈற்றிற் கவிதார்க்கிககேஸரிபாற் றன்குறையை யறைகூவி ஸ்ரீபாததீர்த்தாதிகளைப் பிரஸாதிக்கவேண்ட அஃதுணர்ந்த தண்ணளி வொண்ணிதிச் செல்வரான வேதாந்தாரியரு முள மிரங்கி யன்னவாது பாண்டித்ய கவித்வங்களையுவந்து அவர்வேண்டியவாறே முடிப்பித்தனர். கிருட்டினமிச்சிர ரவைகளைப்பெற்றுக் களிபேருவகை பூப் பத் தந்நாடுபுக்கனர். பின்னர், டிண்டிம னென்னுங்கவி ராமாப்யுதயம் என்ற கிரந்தத்தை யியற்றித் தேசிகனுர்பாலீயலு மதற்கு மாறுத் தேசிகனுர்த்தா மும் யாதவாப்யுதயம்,ஹம்ஸஸந்தேசம் என்றிருநூல்களையு மருளிச்செய்து டனே டிண்டிமகவி கையினீட்டலும், அவன் அவ்விரண்டையு நோக்கிப் பேராச்சரியமெய்தி கோளரியை வீக்ஷித்து'கவிதார்க்கிகஸிம்ம' மென்றபிஞ்து ஒப்பற்ற நும்மொருவர்க்கே பொருந்தும் என்றேத்தி ద్విచతుష్పదపరివర్జన గర్విత కవికరభగండ భేరుండః ఖండనఖండనకవిహిండింభకవి గండడిండిమోజయతు॥ என்றச்லோகத்தை விண்ணப்பஞ்செய்து ஸ்வாமி ஸந்நிதியி லபசாரப்பட்டே னெனப் பிரணமமிட்டு க்ஷாபணஞ் செய்துகொடு தம்மூர்புக்கனர்.

பின்னுள் கழியலு நங்குரவர்பிரான்திருக்குடந்தையாதிய திவ்யதேசங்களையடைந்து யாண்டுள திருப்பிரான்களை நமஸ்கரித்துத் திரும்பவும் திருவணையாடி ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானையுஞ் சூடிக்கொடுத்த நாச்சியாரையுந் திருவடிதொழாநிற்க, நாச்சியாருந்தாஞ்செய்தருளிய உபநிஷத்தான திருப்பாவையிலுள விசேடார்த்தங்களை யெல்லாம்பல கீர்வாண கிரந்தங்களாற் பிரகடனஞ் செய்தீரேயெனப் பெரிது முவந்தருளித் தந் திருமாலையாதிகளைப் ப்ரஸாதிப்பிக்க வேதாந்தாரியரு மவைகளையுள்ளத் துவகையோடேற்று శ్రీవిష్ణుచిత్తకులనందనకల్పవల్లీం என்று துவக்கிகோதாஸ்துதியை விண்ணப்பஞ்செய்ய நாச்சியார் கேட்டுவந்து இதனை நம்முத்ஸவங்களிற் திவ்யப்ரபந்தங்களைமான அனுஸந்திக்க வேண்டுமென்று உலகோர்க் காக்ஞாபித்தனர்.

இவ்வாஞ்ஞை யப்பெருநாட்டின்க ணிதுகாறு நடைபெற்றுவராநின்றது. பிற்றைறயொரு நன்னாளிலித்தூப்பிற்பிள்ளைத் திருநகரியேறவெழுந்தருளி నిరంజనమయంజనః என்ற ச்லோகத்தால் ஆழ்வாரடிபணிந்து நிற்க, நோக்கிய அவ்வாழ்வாரிப்பிள்ளையை விளித்து "வம்மின், கவிராட்! நீவிர்புரிந்துள நன்றிக்குக் கைம்மாறென்னே யெம்மாற் புரியற்பாற்று? என்னை யெனின்,—ஸ்வரூபோபாய விசேடார்த்தங்களை யொருங்கே தெள்ளிதிலுணரற்பாற்றுக் காட்டுந் திருமந்திரார்த்தமாய நந்திருவாய்மொழியிலுள விசேடார்த்தங்க ளனைத்தையுஞ் சாயாரூபத்தாற் பிரகாசிப்பித்தீர். என்றுலுமிதோடன்றிக்கே, யாமுவந்தருளிய நந்திருவாய்மொழியின் ஆறாயிரப்படியின்படி நேராப்பொருள் விரிக்குந்தகைமைத்தாய சில நன்னூல்களை யியற்றக்கடவீ"ரென்றுரைத்து, எற்றபரிசினுமே அன்னுரைச்சிறப்பித்து ஆணந்தோததியிலாழ்த்தி விடுத்தபி னிப்பிள்ளையு மச்குரவர்வாக்கைக் கடைப்பிடித் தொழுகுபவராப் பல் வரிசைகளையு மெளிதி லினிதினீயப்பெற்றுண்டிருந்து பொலிந்துநின்ற பிரான், திருவண்பரிசார முதலாய வெம்பெருமான்களை யாராமனத்தோடேற்றித்தொழுது கோயிலேறவெழுந்தருளி மீண்டுந் திருவெள்ளறை, ஸ்ரீமுஷ்ணம் ஆதிய வேனைய திவ்யநகரங்களைக் கடந்து ஈற்றிற் கச்சியம்பதியைப் புக்கிப் பெருந்தேவிமணாளனை யஞ்சலித்துப் பண்டையே போல் முதலிகளோடு வேதாந்த ப்ரவசனம் புரிந்துகொண் டாண்டாகுங் காலத்து, மிக்க வன்மையாளனாய பாம்பாடி யொருவன் சில துட்டர் கூறுந் துர்ப்போதனைக் கிலக்காகியட்டாஹாசத்தோ டப்பிள்ளையை யண்மி, "நீவிரிம் மந்திரவாதத்தி லெம்மை வெல்வீரேல் நுமக்குரிய 'ஸர்வ தந்திர ஸ்வதந்திரர்' என்ற பிருது சாலும்; அன்றே லொவ்வா"தென்னலும், இஃதுணர்ந்த நிகமாந்த கோளரிபாவார் (தமக்குள்ளே) இவ்வவமானனும், இழிபிறப்பாளனும், துன்மதியும், அட்டஹாஸியுமான பாம்பாட்டியோடு ஸமானமாக வாதிக்கவேண்டிவருகிறதேயென்று வெறுத்திருக்க, இதனை நோக்கியாய்ந்தமுதலிகளாவார்ப் பெரிதும் பிள்ளையைப் பிரார்த்தித்து, "இவ்விழிதகையாளனுவா

னைக் கடிகையில் வெல்லுந்திற னும்மாட்டிருக்க எதற்கா மனம் வெறுத்தல்? ஒண்ணாது. எவ்வாற்றானு மன்னானது நிலைமையை நோக்காது வெல்வதே சால்புடைத்தாமென்ன, நன்றெனத்தேர்ந் தங்ஙனே அராவாட்டியை விளித்து ஈண்டைகாண், எனத் தம்முன்னாவடுத்தடுத்து எழுகீற்றுக்களைப் புவிமிசைவரைந்து, 'இனி நீவேண்டியவாறெலா நிகழ்த்தக்கடவை' யென்ன, அவ்வாண்டியுந்தம்மாட்டுள மஹாநாகங்களைப்பிள்ளையைப்பற்றுமாறு தூண்ட, அவ்விட குண்டலிகளுஞ் சில கீற்றுக்களைக் கடப்பதற்கு வன்மையிலாதிருக்கலும், கண்ட அவ்வாண்டிச் சாலவுஞ் சிலபேரராக்களைக் கடத்த அன்னவைகளு முன்னவைகளுமான சிலகீற்றுக்களை நீத்துப் பிரிதாயவைகளைக்கடத்தற்கேலாது வாளா விருத்தலும், பின்னையும் வெகுளி மீக்கொண்டானாய அன்னவாண்டி சங்கபால னென்றவொரு மஹாஸர்ப்பத்தையேவ வந்நாகமக்கணமே கக்கிய விடத்தொடுங்கூடிய திறந்த வாயொடே அக்கீற்றுக்களேழையுங்கடந்து பிள்ளைபா லாவேசிக்க வண்மியகாலத்து, நோக்கிய கோளரிதனாது நயனகமலயுகளங்களிலனற்பொறி சிதற, வசனியேறெனவார்த்து, கருடதண்டகமென்றொன்றனையருளிச்செய்ய, அக்கணமே தயார்ணவமான * பெரிய திருவடி நயினா ராண்டேகி யவணடைந்துள சங்கபாலனென்ற மஹாநாகத்தைப் பற்றிக் ககனமார்க்கத்திற்கொணர்ந்துபோகலும், அஃதுணர்ந்த பாம்பாட்டியாவான் பெரிது மனமாழாந்து இனி நாஞ்செயற்பால தொன்றுமிலதெனத் தேர்ந்து அங்ஙனே பிள்ளையைச் சரண்புக்கித்தனாது வைசம்மியத்தை யாற்றியந்நாகத்தைத் தருமாறு இரவா விற்றலும், பெரிது மிறங்கியமனத்தராய பிள்ளை முன்னங் கூறியுள்ள கருடபஞ்சாசத்தை மறுமுறையனுஸந்திக்க வங்ஙனே கலுழ னவ்விடநாகத்தைக் கொணர்ந்துவிட, கண்டவவ்வாண்டி பேராச்சரியமெய்தியவனாய் நாகங்கைகொ டவணீத்து வேற்றிடம் புக்குக் கரந்து பிள்ளைத் தைலமாடு மமயமோர்ந்து ஒரு பெருந்தடமெய்தி தானத்தடத்துண் மூழ்கி யதனீர்முற்று மருந்திப் பிள்ளையி னுதரமுதிரப் பெருக்கெடுக்கக் கிழிபடுமாறு உரிய உபாதியை யுண்டாக்க, அன்னதையாய்ந்த நிகமாந்த கோளரி பண்டையேபோல் ஒரு தம்பத்திற் கீறிட்டதனிடமாக வாண்டியருந்திய நீர் அனத்தையும் பெருகுவிக்கப் பெரும்பாபியாமப் பாம்பாட்டி யன்னவகையை யுணர்ந்து நிர்ஜிதனாய், நைந்தமனத்தினனாய்ப் பெரிதும் பீதியொடு 'இனி யெவ்வாற்றானு மப்பிள்ளையை வெலற்கு நம்மாலியலா' தெனத் தெளிந்தானாய்ப் பிள்ளைபால் மாயாவபராதக்ஷாபணஞ்செய்து பலகாற் பிரவணனாகி தேசிகநாமாநுஸந்தானஞ் செய்துகொண் டாண்டே யன்னாளுறைந்து பின்னர்த் தம்மில்லம்புக்குக் கிடந்தனன்.

ஈதிவ்வா றொழிய மற்றொருநா ளோரவசர விசேடத்தால் [illegible] [illegible] என்றச்லோகத்தா னத்திகிரிப் பேரருளாளனைவெம்

* இங்கு 'பெரிய திருவடி நயினா'ரென்றது, கலுழன் எனக்கொள்க.

பெருமானை திர்க்காஞ்சலிபுரிந்து அவணித்துச் சாலவுஞ் சேட்வரை புக்குச் சேவாக்கிரமத்தரற் திருவேங்கடமுடையானை நமஸ்கரித்து அப்பிரான தருள்வெள்ளத்திற் றிளைத்துங் கமலநயனங்களி லானந்தபாஷ்பமும், செய்ய திருமேனியி லுரோமாஞ்சமுமு, திருமுடியி லஞ்சலியஸ்தருமாகிப் பரமா நந்த பரவசரா நிற்நலும், பெருமான் பேரவாவோ டுவந்தருளி வாக்கியை விளித்து நீவிர் முன்னமியற்றியுள 'தயாசதக' த்தைமறுமுறைச்செவிமடுக்க விழைந்தேனென்னப் பிள்ளை, யுய்ந்தே னுய்ந்தேனெனக்கிளத்தியத்தோத்திர த்தைவிண்ணப்பஞ்செய்யப்பெரிதும் வியந்த வுலகளந்தோ னிவ்வேதாந்தாரி யனைநோக்கி 'நீவிர் வேதாந்தாசாரியரென்பதற்கேற்றதாகின்றதித்தோத்திர கவிதா வைபவமிருந்தபடி' யென்றருளிச்செய்ய, தேசிகரும் వేదాంతదేశిక ప దేవినివేశ్యబాలం எனத்தனுது நைச்சியத்தையும், பகவத் கிருபாவிசேட மடியாக வுண்டான தோத்திர வைபவத்தையும், அதில் தமக்குக் கர்த்ருத்வாதிக ளில்லாமையும் பிரதிபாதித்து எம்பெருமானுக்கு அர்ச்சநீயதிருநாமங்களைப் போலே இத்'தயா சதகம்' நூற்றெட்டுச்லோகங்களாயிருக்கும்படி தலைக்கட்டி யருளினர். பிறகு திருமலைவேங்கடவனை ஸ்ரீயப்பதி பிள்ளையைக்குளிரநோக்கிச் சகல வரிசைகளையும்ப்ரஸாதிப்பித்து நந்திருமணி யாழ்வாராங் தூப்பிற் பிள்ளையைச்சத்திர சாமராதி சகல வைபவங்களோடு வலம் வருமாறியற்றக் கடவீரென்று திருமலை ஜீயருக்குக் கட்டளை யிட்டருளினர். அங்ஙனே அன்னார்களு மொருவிழா நிகழ்த்தி முடிப்பித்தனர்.

கே. இரங்காசாரியர்.

---

## LATE MR. PRANATHARTHI HARA SIVA, B.A., L.T.

### காலஞ்சென்ற. பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனார். பி. ஏ., எல். டி.

---

இவர் தஞ்சாவூரைச் சார்ந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில் தெய்வ பக்தியும், நற்குணநற்செய்கைகளும் நிரம்பிய வந்தணர் குலத்திற் பிறந்தார். இளமையிலேயே தந்தையை யிழக்க நேரிட்டபடியாற் றமயன்மார்களி னாதரவிலிருந்து வளர்ந்துவந்தனர். இவர்தமதுகல்விதொடக்கமுதற் பிரவேச பரீக்ஷை தேறுமளவு மாங்கேயேயுள்ள சமஸ்தான கலாசாலையிலும், எப். ஏ. பரீக்ஷை கும்பகோணம் துரைத்தனத்தார்கல்லூரியிலும், பின்னர் சென்னைக் குச்சென்று கிறித்தவக்கலாசாலையிற் பொறுமையே யுருவெடுத்தாற்போன்ற, ரெவரண்ட் கூப்பர் துரையிடத்து தர்க்க சாஸ்திரமும் படித்து, சர்வகலா சாலையிற் பி. ஏ. பட்டமும், சைதாப்பேட்டையில் மாணுக்கர்களுக்குக் கற்பிக் குமுறையைக் கற்பிக்கும் கல்லூரியிற் பயின்று, கலைகற்பிப்பதில் கைதேர்ந்

தவரென்னும் யோக்கியதாபத்திரமு மளிக்கப் பெற்றனர். பின்னர், சென்
னையிற் றொண்டைமண்டலத் துளுவவேளாளப் பள்ளிக்கூடத்தி லுதவி
யுபாத்தியாயரா யமர்ந்தார். இவர் கோபமென்னுங் குன்றேறி நிற்காக் குண
வானாகையால் மாணவர் யாவரும் மாணிக்கமென்றே மதித்தார்கள். இவ்வாறு
சின்னாளிருக்கையிற் கூடலூர் சுதேசக் கலாசாலையதிகாரிகளிவர்தந் திறமை
யினைக் கேள்வியுற்று அத்தகையார் தங்கள் கலாசாலையிலிருந்தால் மிக்க
நன்மை பயக்கு மெனக்கருதி, சிவனாரை யவ்விடத்திற் றலைமை யுபாத்தியாய
ராய்த் தருவித்துக் கொண்டார்கள். அன்னோர்களுக்குச் சிவனார்தந் திறமை
யனைத்தையுங் காட்டக் கூடவில்லை. இதற்குச் சுரமே முதற்பெருங் கார
ணம்; இவர் கூடலூர்போகச் சின்னாள் முன்னர்ச் சுரமென்னும் மலைப்பாம்பு
இவரைப் பற்றிக்கொண்டது. இவரைப்பற்றியிவண் கூறுவான் நேர்ந்தது
இவர்தந் தமிழ்ப் புலமை பற்றியே. இவருக்கு இளமை தொடங்கியே நந்தமி
ழிடத்து வற்றாவன்புவாய்ந்திருந்தது. என்றாலுமதனைத்தான் வளர்ப்பான்
றகுந்தவாசான் றனக்கு வாய்க்காமையைக் குறித்து மிக்க வருந்தி வந்தார்.
பின்னரிவர் சென்னைக்குச்சென்றவுடன் றான் பயிலுங் கல்லூரித் தலைமைத்
தமிழ்ப் பண்டிதராந் தமிழ்ச்சிங்க பிரம்மஸ்ரீ. வீ. கோ. சூரிய நாராயண
சாஸ்திரியாரையே தனக்கு உண்மை வழிகாட்டவந்த வரிய நற்குருவாய்க்
கொண்டு அவர்தம் மியற்றமிழ்மாணவரு ளொருவராயினர். இவர் தனக்குத்
தமிழிடத்துள்ள வார்வத்தினாலும், தனதாசான் றூண்டுதலாலுந் தமிழை
வளர்ப்பான் வேண்டியவனைத்தும் செய்துகொண்டும் வந்தனர். இவ்வாறி
ருக்க வென்னையோ யிவர்தம்மாற்றலை இது காறும் வெளிவிடாதிருந்தனரெ
னின், "கற்க கசடற" வென்னுந் திருமொழியை வெறுமொழியாக்க விரும்
பாமையே யென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென்னத்தெற்றென விளங்கா
நிற்கும். என்றாலு மிவர்தம் திறமை நம் ஞானபோதினியிலிடையிடையே
தோன்றிவந்த சிலப்பதிகாரவாராய்ச்சி, மல்லிகைமாதவர், உமையவள் பதி
கம், பெண்கல்விக்கும்மி யின்னுமிவைபோன்றவரிய விஷயங்களாலும்,சுதேச
மித்திரனிற் றோன்றிய பெரும் வியாசங்களாலுங் காணக்கிடக்கும். இன்னு
மிவர் வரைந்துள்ள தரணியிற் சிறந்த தமயந்தி நாடகமும், ஹனுமான் சிங்
கென்னுமுளவறி நூலும், படித்துள்ளார் யாவரே யிவர்தம் பெருமையினைப்
புகழார். பள்ளியிற் பயிலுமாணவர்கள்வியாசம் வரையும் வகை புரியாது
வருந்துவதையுமுணர்ந்து நம் சிவனார் வியாச மஞ்சரியென்னுங் கட்டுரைத்
தொகுதியைத் தமிழிலுந் தெலுங்கிலும் வரைந்து மிருக்கின்றனர். இன்னன்
றியை யென்றுமறக்கற்பாலதன்றே யன்றோ? இத்தகைப் பேருதவிகளைச்
செய்த பிரணதார்த்திஹரசிவனார், சுரமென்னுங் கொடியனாற்பிணிப்புறவே,
அவனினின்றும் விடுவிப்பான் வேண்டி, யனேகமருந்துகளையுண்டும் பயன்ப
டாது, சென்ற மேமாதம் 12-ம். தேதி செவ்வாய்க்கிழமை இரண்டுமணிக்கு
இறைவன் பதமடைந்தார். ஐயோ! தமிழ் மகளே!! அரிய வின்னன்பர்களெல்

லாங் கொடிய கூற்றுவனாற் கொண்டுபோகப்படுவது என்னே? நீஅரிவையே
யாயிடினு மயனிடத்தி லறிக்கையிடாயோ?

சிவனார், இவ்வுலகில் தமிழை வளர்ப்பான்வேண்டிச் செய்த தன்னுடை
யவும், பிறருடையவுமான முயற்சிகளெல்லாம் போதாதெனக்கருதி, இறைவ
னிடத்தில், தமிழ் மகள் தளர்ந்து கண்கலங்காது, முகமலர்ந்து களிப்பதற்
கான முயற்சிகளைச் செய்யும்படி தமிழரனைவருக்கு மூக்கமுண்டாக்கவும்,
நோயாற்றுன்புற்றிருக்குந் தனதாசானுக்குச்சௌக்கியத்தைத் தந்தருளுமாறு
மிறந்து கேட்பான் சென்றனர்போலும். இவர் தனக்குப்பின், கடுவிளம்பிரா
யமுள்ள தன் மனைபாளையும், பால்குடி மறவாத பாலகர்களிருவரையும்
அநேக நேசர்களையும் சுற்றத்தார்களையும், விட்டுப்போந்தனர். கருணையங்
கடவுளம்மாதினுக்கு மனத்திடனையு மக்காளையர்களுக்குச் சகல சம்பத்துக்
களையும் பூர்ணயுளையுந் தந்து கடாக்ஷிப்பாராக.

---

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

5 நிமிஷங்களுக்குள் 5 புலிகள் :—மிஸ்டர்காலின்ஸ் என்பவரே சுடுவ
தில் வல்லவர் எனப் பெயரெடுத்திருப்பதாய் மேயில் பத்திரிகைக்கு ஒரு
நிருபர் இம்மதி 9-ஆந்தேதிவரைந்துள்ளார். இதைக் காட்டிலாகாவில் வெகு
நாள் ஸர்விஸ் பெற்றதொரு ஆபீஸரிட முரைக்கவே அவர் சற்று ஊன்
றிப்பார்த்துப் பின்வருமாறு உரைத்தன ரென்று அந்நிருபர் கூறுகிறார்:—
"வெளிதேசத்திலுள்ள தொருகாட்டில் சுற்றுப் பிரயாணம் போயிருக்கை
யில் ஒருநாட்காலையில் கூடாரமடித்து அதில் வீற்றிருக்கக் குடியானவன் ஒரு
வன் ஓடிவந்து சிலபுலிகள் வந்து தொத்தரவுசெய்வதாயும், பசுக்களைக்
கொன்று போவதாயும், 6 மையில்தூரத்தில் அவை பதுங்கியிருப்பதாயும்
கூறினன். நான் வேறிருவருடன் கிளம்பித் துப்பாக்கி, ஈட்டி முதலிய
கருவிகளை யெடுத்துச்சென்றேன். 6 மைல் தூரஞ் சென்றதும் கடுங்கானக
மொன்று தென்பட, அது சதிரவன் கண்திறந்துபாராக் கானகமெனவே
மதித்தோம். நாற்புறத்திலும் மரங்களும் புதர்களும் சூழ்ந்திருக்க எதிரில்
மிகவுஞ் சிறிய வாயுடைய குகையொன்று தென்பட்டது. கற்பாறை யொ
ன்று அக்குகையின் வாயிலுக் கெதிரில் நின்றிருந்ததனல் குகைக்குள்
இருக்கும் ஜந்துக்களை எளிதிலறியக்கூடவில்லை. ஆயினும் அத்தகைய விட
ங்களில் புலியிருப்பது நிச்சயமென்று எண்ணிக்கொண்டு என்னுடன் கூட
வந்தவனொருவனைக் கற்பாரையின் கீழிருந்து கைக்கொட்டக் கட்டளையிட்டு
கற்பாறையின்மீதே குகைக்குள்ளிருந்து புலி பாயுமாதலால், வேறோ
ரிடத்திருந்து அது பாய்ந்ததும் சுட்டுவிடக் கருதிச் சமீபத்தினின்றதொரு
பாறையின்மீது நான் நின்றுகொண்டேன். அப்போழ்து 5 புலிகள் இரத்த
விளாருடன் பதுங்கியிருந்தவை என் கண்ணெதிர்ப்பட்டது. இதற்குள் கை
கொட்டின சப்தங்கேட்டு முன்னிருந்த புலி நான் நினைத்தவண்ணமே கற்

பாறையின்மீது பாய்ந்தது. உடனே நான் அதைச் சுட்டு வீழ்த்தினேன். 2.-3-ஆவது புலிகளும் அக்கதியை யடைந்தன. 4,-5 ஆவது புலிக்குட்டிகள் முந்தியவைபோல் ஒன்றுக்குப்பின் ஒன்றாய்ப் பாயவில்லை. 1 நிமிஷம் உள்ளிருந்து திடீரென்று பாயவும் அவைகளையுஞ் சுட்டு வீழ்த்தினேன். மரித்த பிராணிகளனைத்தும் குகையின வாயிலடைப்பட்டுக் கிடந்தன. பின்னர் அவைகளைப்பார்க்கையில் முதற்புலி 9-அடி 7-அங்குலமும், 2-ஆவது 8-அடி 7-அங்குலமும், 3-ஆவது 9-அடி 4-அங்குலமும், 4-வது 9-அடி 2-அங்குலமும், 5-ஆவது 9-அடி நீளமுமாயிருந்தன." இதுவே அந்த காட்டிலாகா ஆபீஸரது கதையாம். புலி வேட்டையில் வல்லவரெனக் கூறப்பட்ட மிஸ்டர் காலின்ஸ் என்பவரது திறமைக்கும் இக்காட்டிலாகா ஆபீஸரது திறமைக்கும் வித்யாசமிருக்கின்றது. மேற்சொல்லிய நிருபரதுகதை எவ்வளவு தூரம் நிஜமென்பது தெரியவராது ?

***

அலுமினியத்தினற் செய்யப்பட்ட ஆகாயக் கப்பல்:— மரத்தினலும் மெழுகுசீலைகளினலும் ஆகாயக்கப்பல்கள் செய்யப்படுகின்றன வென்பதைக் கேட்டிருக்கிருேமே யொழிய இப்போழ்து புதிதாய்க் கிளம்பியிருக்கும் அலுமினியத்தினல் ஆகாயக்கப்பல்கள் செய்யப்பட்டு வருகின்றன வென்பதைக் கேட்க மிக்க வாச்சரியமாகவிருக்கின்றது. 228-அடி நீளமுள்ள ஆகாய அலுமினியக் கப்பலொன்று அமெரிகாகண்டத்திலுள்ள ஐக்கியமாகாணங்களைச் சேர்ந்த ஸென்பிரான்ஸிஸ்கோவில் கட்டப்பட்டு வருகின்றதாய்க் கேள்விப்படுகிருேம். இதை ஸ்டான்லி என்பவர் கண்டுபிடித்தனராகையால் ஸ்டான்லி ஆகாயக்கப்பலென்று பெயரிடப்படுமோம். இது அலுமினியத்தினல் செய்யப்படுகின்றதாகையால் சகலவிஷயங்களுக்கும் உதவுப்போலும். இருமூலைகளிலும் கூர்மையாகவிருக்குமாம். குழாய் வடிவமுள்ளதாம். அப்பாகத்தின அகலம் 116-அடி; உயரம் 56-அடி. அது இரண்டுபாகங்களாகப் பிரிக்கப்பட்டுளதாம். அதனடிப்புறத்திலிருந்து 12-அடி உயரத்தில் பெரிய பலகையொன்று குறுக்கிட்டு ஓடுகின்றதாம். கீழ்பாகத்தில், சிற்சில யந்திரங்கள், பிரயாணிகள், மற்றென்ன வேண்டுமோ அவை வைக்கப்படுமோம். மேல்பாகம் ஆறு அறைகளாகத் தடுக்கப்பட்டு ஒவ்வொரு அறையிலும் (ஹைட்ரஜன்காஸ) ஜலவாயு சேகரித்து வைக்கப்படுமோம். இந்த ஜலவாயுவே கப்பலை ஆகாயத்தில் பறக்கச்செய்வதற்கான சாதனமாம். ஒவ்வொரு அறையினுட்புறத்திலும் பட்டினல் மூடப்பட்டிருக்குமாம். ஒருவேளை அலுமினியம் விடுபட்டுப்போயினும் ஜலவாயு வீணில் வெளியிற் சிதருது இப்பட்டுமூட்டம் காக்குமாம். 6அறைகளிலும் இருக்கும் வாயுவினல் 21,000 ராத்தல்களுள்ள சுமையை எளிதி லெழுப்பமுடியுமாம். ஆனல் கட்டப்பட்டுவரும் கப்பலின் பாரம் (யந்திரசக்திகள உள்பட)13,000 ராத்தல்களாம். இவைகளல்லது சுமார் 30 பிரயாணிகளை யவர்களது மூட்டை, அன்னபானதிகளுடன் தூக்கிச்செல்ல அக்கப்பலுக்கு வன்மையுள்ளதேன கூறப்படுகின்றது.